# தோழன்



விலை ரூ. 10/-

சூன் 2010

சூன் 2010

# தோழன்

மலர் 51 இதழ் 6

ஆசிரியர்

அருள்பணி R. மரிய டெல்லஸ்

ஆசிரியர் குழு

அருள்திரு. A. பீட்டர் அபீர்
அருள்திரு. A. லூயிஸ்
அருள்திரு. ரோலிங்டன்
அருள்திரு. A. ஜோமிக்ஸ்
அருள்திரு. A. ஜெயராஜ்
பேராசிரியர் குழந்தைராஜ்
டாக்டர் A. புஷ்பராஜன்

ஆலோசகர் குழு

பேராசிரியர் G.A. கஸ்பார்
பேராசிரியர் M. முடியப்பன்

அலுவலகப்பணி

சகோ. பெரேரா

கணினிப்பணி

அருள்சகோதரி பெர்ட்டினஸ்

ஆண்டு சந்தா

இந்தியா : ரூ. 100
இலங்கை : ரூ. 400
மலேசியா : 70 வெள்ளி

வெளியீடு

TNBCLC, திண்டிவனம்- 604 001

*Website :* http://www.tnbclc.org
Tel: 04147 / 222177, 223177

## உள்ளே!

1. ஆசிரியர் பக்கம் 1
2. இன்றைய உலகில் நம் குருக்கள் 3
அருள்பணி. பீட்டர் அபீர்
3. கல்வியின் சிறப்பு 10
அருள்பணி. கல்லரசு
4. புனிதர்களின் பார்வையில் குருத்துவம் 20
அருள்பணி. மரிய அந்தோனி
5. திருப்புகழ்மாலையின் சிறப்பு 24
சகோ. மரிய அல்போன்சாள்
6. ஏழு திரிகள் 27
அருள்பணி. ரோலிங்டன்
7. மறையுரை மொட்டுகள் 29
8. குறுக்கெழுத்துப்போட்டி 39

# ஆசிரியர் பக்கம்

விடுமுறை முடிந்துவிட்டது. பள்ளிகள், கல்லூரிகள், தொழிற்கல்வி நிறுவனங்கள் என எல்லாமே தங்கள் வாசல் கதவுகளைத் திறந்து வைத்துக் கொண்டு மாணவர்களின் வருகைக்காகத் தவம் கிடக்கின்றன. இன்பச் சுற்றுலா, கணனி மற்றும் இசைப் பயிற்சி வகுப்புகள், விவிலிய கருத்தரங்கு மற்றும் தியானங்கள் என்ற ஆன்மிகப் பயணங்கள்... இப்படி எண்ணிலடங்கா உருவாக்கப் பயிற்சிகளில் ஈடுபட்டுவிட்டு, மீண்டும் இலட்சியத்திற்காக, நலமாய் வாழ்வதற்காக விரைவாக ஓட வேண்டிய ஒரு நிலை. இப்போராட்டத்தில் கலந்துகொள்ளாதவர் எவரும் இல்லை என்றுதான் கூறவேண்டும்.

சூன் மாதம் என்றாலே பல பெற்றோர்கள் விழிபிதுங்கி, பிள்ளைகளின் நலனுக்காக எல்லாவற்றையும் இழக்கும் மாதம் எனலாம். பிள்ளைகள்மேல் கொண்ட அளவுகடந்த பாசத்தால், எதிர்காலத்தில் தங்களை சிறிதேனும் கவனித்துக் கொள்வார்கள் என்ற நப்பாசையில் எல்லாவற்றையும் செலவிட்டு நல்ல பள்ளி, நல்ல படிப்பு, நல்ல கல்லூரி, நல்ல தொழிற்படிப்பு என்ற கனவுகளுடன் செயல்படும் பெற்றோர்கள் ஆயிரம் ஆயிரம் உண்டு. தியாகத்தின் மொத்த உருவாக உலாவரும் அனைத்துப் பெற்றோரின் வாழ்வும் பல காவியங்களாக எழுதப்பட்டிருக்க வேண்டும். மாறாக, பலரின் வாழ்க்கை காற்றோடு கலந்து கனவாகவே மாறிவிடுகின்றது, மாறியும் கொண்டிருக்கிறது.

கனவுகளை நனவாக்கும் மனிதர்களை இந்த நூற்றாண்டு தேடிக் கொண்டிருக்கிறது. பட்டி தொட்டிகளில் அறிவு உலகம் ஆனந்தமாய் நடமாடி பல புதிய மேதைகளை வெளி உலகிற்கு அறிமுகம் செய்துள்ளது. அமெரிக்க கணனி நிறுவனத்தில் உள்ள ஒரு மிகப் பெரிய கணினி சிக்கலை, சில நிமிடங்களில் தீர்த்து வைக்கும் அளவுக்கு திறம் படைத்த சாமானியன் நேற்றுவரைப் பட்டிக்காட்டில் வளர்ந்தவனாக இருக்கிறான். கிராமப்புற வீடுகளிலும் இறைவன் அறிவையும், திறமையையும், புதிது புதிதாகக் கண்டுபிடிக்கும் முயற்சிகளையும் ஊற்றாய் கொட்டி வைத்துள்ளார் என்பதை மறுப்பவர் யாரும் உண்டோ?

திறமைகளை, அறிவை, வாழ்வின் முன்னேற்றத்தை மெல்ல மெல்லத்தான் வளர்த்துக்கொள்ள முடியும். இவைகள் அனைத்தும் ஒரே இரவில் வந்து கொட்டும் பனிமழையாக எண்ணிவிடக்கூடாது. மாறாக, தொடர்ந்து போராடுவதால், நம்பிக்கையோடு செயல்படுவதால் அனைத்தும் கைகூடும். ஒவ்வொரு முயற்சியும் வாழ்க்கையின் ஏணிப்படியாக மாற்றிக்கொள்ள முயல வேண்டும்.

தொடர்ந்து போராடும் எல்லாரும் வெற்றி பெறுவர். போராட மறுப்போர் வெற்றி பெறுவதும் இல்லை, பிறரின் வாழ்வில் மகிழ்ச்சி

கொண்டு வருவதும் இல்லை. எல்லா நிலைகளிலும் போராடக் கற்றுக்கொண்டு முன்னேறும்போது, முன்னேற்றம் என்பதையே முடியாது என்று சொன்ன நிலை மாறி, வாழ்வில் மாற்றம் ஏற்படும், மகிழ்ச்சி ஏற்படும்.

கடந்த ஆண்டு முழுவதும் குருத்துவத்தின் மேன்மையை அறிந்து குருக்களுக்காகச் செபித்து குருக்களுக்கான ஆண்டை சிறப்பு செய்தோம். 'குருக்களுக்கான ஆண்டு' நிறைவு விழா காலக்கட்டத்தில் இருக்கும் நாம், தொடர்ந்து முப்பணிகள் வழியாக இறையாட்சிப் பணியில் ஈடுபட்டுள்ள குருக்கள் எல்லா வகையிலும் சிறப்புடன் வாழ தொடர்ந்து செபிப்போம்.

இம்மாத கட்டுரைகளில் இரண்டு குருத்துவத்தின் மேன்மையையும், சிறப்பையும் நமக்குச் சுட்டிக்காட்டுகின்றன. மற்ற கட்டுரைகள் கல்வியின் சிறப்பை, திருப்புகழ்மாலையின் சிறப்பை எடுத்தியம்புகின்றன. இவைகளைப் படைத்தளித்த அருள்பணி. பீட்டர் அபீர், அருள்பணி . ஜெ. மரிய அந்தோனி, கல்லரசு, சகோ. மரிய அல்போன்சா ஆகியோருக்கு தோழன் சார்பாக மனமார்ந்த நன்றி.

மேகத்தில் இருந்து தொடர்ந்து விழும் மழைத் துளிகள் பூமியை வளமாக்குகின்றன, வறண்ட நிலங்களுக்குப் பசுமை சேர்க்கின்றன. எனவே, வாழ்க்கையில் முன்னேற விரும்பும் அனைவருமே விடாமுயற்சியுடன் தொடர்ந்து போராடி வெற்றி பெறுவோம், பிறருடைய வாழ்வில் வசந்தம் சேர்ப்போம்.

என்றும் நிலையான தோழமையுடன்
அருள்பணி. இரா. மரிய டெல்லஸ்.

08.05.2010 அன்று இந்திய நாட்டிற்கான திருத்தந்தையின் தூதராக மேதகு பேராயர் சால்வாத்தோர் பொன்னாக்கியோ அவர்களைத் திருத்தந்தை 16-ஆம் பெனடிக்ட் அவர்கள் நியமித்துள்ளார்கள். பேராயர் அவர்கள் இந்தியா மற்றும் நேபாளத்திற்கான திருத்தந்தையின் தூதராக செயல்படுவார். இவர் பல்வேறு நாடுகளுக்கு திருத்தந்தையின் தூதராகப் பணியாற்றிய அனுபவம் கொண்டவர். கடந்த 2003 லிருந்த 2010 வரை கம்போடியா, சிங்கப்பூர், தாய்லாந்து ஆகிய நாடுகளுக்குத் திருத்தந்தையின் தூதராகப் பணியாற்றியுள்ளார். அவரின் பணி சிறக்க தோழன் இதழ் வாழ்த்தி வரவேற்கிறது.

*இன்றைய உலகில்*

# நம் குருக்கள்

குருக்கள் என்றவுடன் பலி செலுத்துவதுதான் நமது எண்ணத்திற்கு வருகிறது. செக்கரியாவை அறிமுகம் செய்த லூக்கா கடவுளின் திருமுன் குருத்துவப் பணி ஆற்றி வந்தார் என்று கூறிவிட்டு, குருத்துவப் பணி மரபுக்கு ஏற்ப ஆண்டவரின் திருக்கோவிலுக்குள் சென்று தூபம் காட்டினார் என்று குறிப்பிடுகிறார் (லூக் 1:8). அப்படியெனில் பலிசெலுத்துவதுதான் குருக்களின் முதன்மையானப் பணியா என்று கேட்கத் தோன்றுகிறது. யூத வரலாற்றில் குருக்கள் முதன் முதலில் இறைவார்த்தையை எடுத்துரைக்கும் பணியைத்தான் கொண்டிருந்தனர் (நீத 17:5; 18:5; 1 சாமு 14:36). அதன் பின்னரே கோவிலில் காணிக்கை செலுத்தும் பணியையும் மேற்கொண்டனர். இன்றைய கத்தோலிக்க குருக்களுக்கும் இறைவார்த்தைப் பணியும் அருள் அடையாளங்களை நிறைவேற்றும் பணியும் ஒருங்கே செல்கிறது. இத்தகைய இவர்களது பணிகாலத்திற்கு ஏற்ப மாற்றம் காண்பதையும் நாம் பார்க்கின்றோம். குறிப்பாக அறிவியலும் சமூக விழிப்புணர்வும் தொழில் நுட்பமும் மிகவும் வளர்ச்சி பெற்றுள்ள இன்றைய காலக்கட்டத்தில் நமது குருக்களின் பணி மிகவும் சவால்கள் நிறைந்ததாக காணப்படுகிறது. இச்சவால்களை தெளிவுற அறிந்துகொண்டால் குருக்களின் பணி இறைச் சித்தத்திற்கு இணைந்து இருக்கும் என்பது திண்ணம்.

### 1. உலகிற்கு உரியவரல்ல

இயேசு தம் சீடர்களை விட்டுப் பிரியும் நேரத்தில்



அவர்களுக்காக இறைவனிடம் மன்றாடினார் (யோவா 17). அப்பொழுது அவர்களுடைய பணியைப் பற்றிக் கூறும்போது இவர்கள் இந்த உலகில்தான் இருக்கிறார்கள். ஆனால் இவர்கள் இந்த உலகிற்கு உரியவர்களல்ல என்று குறிப்பிட்டார் (யோவா

17:14). எந்த ஒரு குருவின் நிலைப்பாடும் எப்பொழுதும் இதுதான். குருக்கள் உலகில் உள்ளனர். சமுதாய மாற்றங்களுக்குத் தங்களையே உட்படுத்திக் கொள்கின்றனர். மக்களின் தேவைகளில் நாளுக்கு நாள் மாற்றம் ஏற்படுவதையும் அவர்கள் காண்கிறார்கள். இந்த உலகத்தோடு ஒட்டி உறவாடும் நிலையையும் அவர்கள் கொண்டிருக்கிறார்கள். ஆனால்



எப்பொழுதும் அவர்கள் கடவுளுக்கு உரியவர்கள். விண்ணரசின் அடையாளமாக இந்த உலகில் இருக்கவேண்டியவர்கள். அதனால் தான் இந்த உலகம் குருக்களை முழுமையாகப் புரிந்துகொள்ளும் என்றோ அல்லது ஏற்றுக்கொள்ளும் என்றோ நாம் எதிர்பார்க்க முடியாது. பல நேரங்களில் குருக்கள் எண்ணத்திலும் உறவு நிலையிலும் தனித்து விடப்படுவார்கள். இதனால் ஒருசில குருக்கள் நிலை தடுமாறி நாம் எங்கே இருக்கிறோம் என்றுகூட புரியாத நிலையில் ஆளுமை உளைச்சலில் குழம்பி விடுவார்கள். ஆங்கிலத்தில் இச்சவாலை Identity Crisis என்று கூறுவது வழக்கம்.

**2. பணியாளராக**

கடந்த பல நூற்றாண்டுகளாக குருக்கள் அதிகாரத்தின் மையமாக இருந்தனர் என்பது உண்மைதான். எல்லாச் சூழல்களிலும் எல்லாத் தேவைகளிலும் பொதுமக்கள் குருக்களை நாடினர். குரு சொன்னால் அது தெய்வ வாக்கு என்றும் மக்கள் கருதினர். எனவே குருக்களுக்கு பொதுமக்கள் எப்பொழுதும் அடிபணிந்து இருக்க வேண்டும் என்பது மட்டுமல்ல அனைத்து உதவிகளையும் செய்ய வேண்டும் என்றுகூட கருதினர் (*நமதுமேய்ப்பர்களுக்கு நம்மாலான உதவிகளைச் செய்ய வேண்டும்*). ஆனால் இன்று இந்நிலை மாறிக் கொண்டு வருகிறது. குரு என்பவர் அதிகாரத்தின் மையமல்ல. உலகியல் அறிவிலும் ஞானத்திலும் மற்றவர்கள் குருக்களைவிட அதிகம் வளர்ச்சியும் அடைந்து விட்டார்கள். குருக்கள் அதிகாரம் செலுத்துவதைவிட தாழ்ச்சியோடு பணிசெய்ய வேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள். இக்கருத்தைத்தான் சமீபகால திருத்தந்தையர்களும் வலியுறுத்தி வருகிறார்கள். துன்புறும் ஊழியரான இயேசுவை மிக நெருக்கமாகப் பின்பற்ற வேண்டியவர்கள் குருக்கள் என்ற கருத்து இன்று மேலோங்கி நிற்கிறது. மதிப்பும் மரியாதையும் குரு என்ற நிலைப்பாட்டால் மட்டும் வருவது அல்ல. மாறாக, சிறப்பாக அவர் செய்யும் பணியினால் வருகிறது என்பதை இன்றைய குருக்கள் அதிகம் புரிந்துகொள்ள வேண்டும்.

### 3. கேள்விக்குறியாகும் நற்செய்தி மதிப்பீடுகள்

ஒருகாலத்தில் அன்பு, மன்னிப்பு, இரக்கம் போன்றவை மிகவும் மதிக்கப்பட்டன. பணிவும் தாழ்ச்சியும் சிறந்த பண்புகளாகக் கருதப்பட்டன. ஆனால் இன்றைய நுகர்வு கலாச்சாரச் சூழலில் பணமும் பதவியும் அதிகாரமும் மிகப்பெரும் "பண்புகளாக" மக்கள் நினைக்கிறார்கள். பணம் அதிகாரத்தைக் கொடுக்கிறது, அதிகாரம் பணத்தைக் கொடுக்கிறது. இதுதான் வாழ்வின் உயிர் நாடியாக உள்ளது. இச்சூழலில் உயிருக்கோ அல்லது உண்மைக்கோ எந்தவித மதிப்பும் மரியாதையும் இருப்பதில்லை. உலகின் உயிரான இயேசு தாமே உண்மையும் வழியும் வாழ்வும் என்று உரைத்தார். அவரது அடிச்சுவட்டில் பணி செய்ய நேர்ந்துகொண்ட குருக்கள் இன்றைய வியாபார, நுகர்வு கலாச்சார சூழலில் பணியாற்றுவது என்பது மிகப்பெரிய சவாலாக உள்ளது. மேலும் மக்கள் கடவுளை பயத்தினால்தான் நாடுகிறார்கள். இறை நம்பிக்கையோ இறை அனுபவம் தேடும் எண்ணமோ மிக மிகக் குறைவு. சமயமும் சமயச் சடங்குகளும சமய வழிபாடுகளும் ஒரு வியாபாரமாக மாறிவிட்டன. இதனால் மக்களின் வழிபாட்டிற்கும் வாழ்க்கைக்கும் தொடர்பு இருப்பதில்லை. இத்தகையச் சூழலில் இறைப்பணி ஆற்றும் குருவின் நிலைப்பாடு சவாலுக்கு உட்படுத்தப்படுகிறது.

### 4. தொலைத் தொடர்பின் தாக்கம்

தொடர்பு சாதனங்கள் இன்று மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்து கின்றன. மக்களின் மனத்தை உருவாக்குவது மட்டு மல்ல வாழ்க்கைத் தர்த்தையும் மாற்றும் வல்லமை படைத்தவை இன்றைய தொலைக்காட்சி, பாத்திரிகைகள், மின்வலைகள் (Internet) போன்ற தொலைத் தொடர்பு கருவிகள். இவற்றினால் உண்மையை பொய்யாக்கவும் முடியும், பொய்யை உண்மை யாக்கவும் முடியும். இவை குடும்பத்திலும் சமூக உறவிலும் மிகப்பெரிய சிக்கல்களை ஏற்படுத்து கின்றன. மேலும் இன்றைய காலக்கட்டத்தில் எல்லாரின் மனத்தையும் ஆட்டிப் படைப்பது தன்னலம். தன்னல வலையில் சிக்கிக்கொண்டு அனைத்து சூழல்களையும் தங்களுக்குச் சாதகமாக மாற்றிக்கொள்ள வேண்டும் என்ற வெறித்தனத்தை இன்றைய காலத்தில் நாம் காண்கிறோம். அரசியல்வாதிகளும் அரசாங்க அதிகாரிகளும் சுரண்டல் என்ற வார்த்தைக்குத்தான் மதிப்பு அளிக்கிறார்களே ஒழிய நீதி, நேர்மை என்ற மதிப்பீடு மங்கி விட்டது. உதாரணமாக இந்தியாவின் மொத்த செல்வத்தையும் 10 சதவீத செல்வந்தர்களே அனுபவிக்கிறார் கள். இதனால் சுமார் 90 சதவீத மக்கள் வறுமையில் வாடுகிறார்கள். இவர்கள் மத்தியில் நற்செய்தி

மதிப்பீடுகளான அன்பு, மன்னிப்பு, இரக்கம், உண்மை, பகிர்வு போன்றவை கேள்விக்குரியதாக ஆக்கப்படுவது மட்டுமல்ல கேளிக்கைக்கு உட்படுத்தப் படுகின்றன. இச்சூழலில் நீதியை நிலைநாட்டும் வேட்கை கொண்டோர் பேறு பெற்றோர் என்று அறிவிக்கும் இயேசுவின் சீடர்களான குருக்களின் பணி மிகப் பெரிய சாவாலுக்கு உட்படுகிறது.

### 5. பரவலாக்கப்படும் சமூக அநீதிகள்

இந்தியா போன்ற ஒரு குடியரசு நாட்டில் பலதரப்பட்ட சமயவாதிகள் மட்டுமல்ல மொழி, இனம், சமயம், போன்றவற்றால் வேறுபட்டு நிற்கின்ற மக்கள் வாழ்கின்றனர். மகாத்மா காந்தி வலியுறுத்திய ஒருமைப்பாட்டு எண்ணம் மிகவும் அதிகம் தேவைப்படுகிறது. ஆனால் இதை எல்லாம் இன்றைய சமூக சிற்பிகளும் சமயவாதிகளும் மறந்துவிட்டனர். வட்டாரம், மொழி, சமயம், இனம் போன்ற வற்றால் பிரிந்து நிற்பது மட்டு மல்ல, பகைமை உணர்வும் மேலோங்கி நிற்பதையும் காண்கிறோம். இத்துடன் மொழி, சமயம், இனம் போன்றவற்றால் சிறுபான்மையினராக இருக்கும் மக்கள் ஒடுக்கப்படுவதையும் இன்றைய காலக்கட்டத்தில் நாம் அதிகம் காண்கிறோம். “எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக” (யோவா 17:21) என்று போதித்தது மட்டுமல்ல வாழ்ந்துகாட்டி தம் சீடர்களையும் அப்பணிக்கு அழைத்தார் இயேசு. அவரது அடிச்சுவட்டில் பணிசெய்யும் குருக்கள் மேற்கண்ட சூழலில் ஒருமைப்பாட்டை நிலை நாட்டுவது என்பது மிகப்பெரிய சவாலாகும். சுயநலத்திற்காகவும் ஓட்டு வங்கிக்காகவும் மக்களை திசைதிருப்பும் அரசியல்வாதிகள் மத்தியில் உண்மைக்கு குரல் கொடுக்கும் குருக்களின் நிலைப் பாடு அவ்வளவு எளிதல்ல.

### 6. இன்றைய திருச்சபையில்

இன்றைய திருச்சபையில் மக்கள் உண்மை வழிபாட்டிற்கு



முக்கியத்துவம் கொடுப்பதைவிட பக்தி முயற்சிகளுக்கும் விழாக் களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். இறை மக்களுக்கு முறையான மறைக் கல்வி போதிக்கும் பணியானது விழாக்கள் கொண்டாடுவதிலும் திருப்பயணங்கள் மேற்

கொள்வதிலும் முடங்கி விடுகிறது. குருத்துவப் பணியின் மேன்மையை ஒரு குருவானவர் நன்கு அறிந்திருந்தாலும் இன்றைய இறைமக்களின் மேலேட்டமான பக்தி முயற்சி களினால் மக்களை முறையாக வழிநடத்தும் பணி பாதிக்கப்



படுகிறது. இத்துடன் பிரிவினை சபைகளும் கத்தோலிக்கர் களிடையே மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. "ஆறுதல் நற்செய்தியை" மட்டும் வலியுறுத்திப் போதிக்கின்ற பலதரப்பட்ட பெந்தகோஸ்து சபைகள் உண்மை கிறிஸ்தவ மதிப்பீட்டினை மக்கள் புரிந்து கொள்வதைத் தடுக்கின்றன. துன்பம், போராட்டம், வேதனைகள் யாவற்றையும் கிறிஸ்தவ கண் கொண்டு பார்க்க உதவுவ தில்லை. மாறாக எப்படியும் கடவுள் குணப்படுத்த வேண்டும் என்ற குருட்டு பக்தியை இத்தகைய சபைகள் கிறிஸ்தவர்களிடையே உருவாக்குகின்றன. மேலும் கத்தோலிக்க கொள்கைகளுக்கு எதிராகவும் இவை அதிகம் போதிக்கின்றன. இத்தகையச் சூழலில் ஒரு குருவின் பணி மிக கடினமாகவே உள்ளது. இச்சபை களில் இருந்து கத்தோலிக்கர் களைக் காப்பாற்றுவதற்கு ஒரு குருவின் பணியில் கிறிஸ்துவிடம் இருந்த மனநிலைத் தேவைப் படுகிறது. மக்களை அடிக்கடி சந்திப்பது, விவிலிய அடிப்படை போதனையை அளிப்பது, அன்புடனும் பாசத்துடனும் மக்களை அணுகுவது, சார்பு நிலையோ அல்லது முன்சார்பு நிலையோ இன்றி மக்கள் எல்லாருமே தன்னுடைய மந்தையைச் சேர்ந்தவர்கள் என்பதை தெளிவாக வெளிப்படுத்துவது போன்ற நிலைப்பாட்டினால் குரு உண்மை யான நல்லாயன் இயேசுவின் பணியாளராகத் திகழ்கிறார்.

## 7. வேலையே செபம்

இன்றைய மக்களின் மனநிலை தாங்கள் செய்யும் வேலையே செபம் என்பது. பகல் முழுவதும் மக்களுக்குப் போதிக்கும் பணி ஆற்றிய இயேசு இரவில் இறைவனிடம் தனித்திருந்து செபித்தார் என்று நாம் அறிவோம் (லூக் 5:16). செபம் என்பது இறைவனோடு நம்மையே ஒன்றித்த நிலையில் அவரோடு உரையாடுவது மட்டுமல்ல

## நடைபெற்ற VBS பயிலரங்கங்கள்

தமிழக விவிலியப் பணிக்குழு பல்வேறு மறைமாவட்டங்களில் VBS பயிலரங்கத்தை சிறப்பாக நடத்தியது. ஏப்ரல் 18-இல் சென்னை உயர் மறைமாவட்டத்தில் மறைமாவட்ட மேய்ப்புப்பணி நிலையத்தில் 300-க்கு மேற்பட்டோருக்கு பயற்சி வழங்கப்பட்டது.

ஏப்ரல் 25-இல் தஞ்சை மறைமாவட்டத்திலுள்ள மேய்ப்புப்பணி நிலையத்தில் 150 பேருக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன.

தக்கலை மலங்கரா மறைமாவட்டத்தில் மே மாதம் முதல் நாளில் 200 பேருக்கு VBS பயிற்சி வழங்கப்பட்டது.

இப்பயிற்சியினை அருள்பணி. மரிய டெல்லஸ், திரு. பீட்டர் ராஜா, அருள்சகோதரி பெரேரா, திரு. ஆரோக்கியசாமி, திரு. முடியப்பன், திரு.சந்தியாகு ஆகியோர் வழங்கினர்.

சென்னை - மயிலை உயர் மறைமாவட்ட செயலர் அருள்பணி. தேவநேசன் அவர்களுக்கும் அவருடன் ஒத்துழைத்து பணியாற்றும் சகோதரி சுசிலா மற்றும் திரு. விக்டர் குழுவினருக்கும், தஞ்சை மறைமாவட்ட விவிலியப் பணிக்குழு செயலர் அருள்சகோதரி மெர்சி அவர்களுக்கும், தக்கலை மறைமாவட்ட செயலர் அருள்பணி. ஜோசி அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியும் வாழ்த்துக்களும்.

அவருடைய எண்ணங்களை புரிந்துகொள்ள தியானத்தில் நாடுவது. ஆனால் மக்கள் பொதுவாக பலவிதமான கவலைகளினாலும் வேலைகளினாலும் இத்தகைய தனி செபத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. இத்தகைய சமூக நிலைப் பாட்டினால் தாக்கம் அடையும் நமது குருக்களும் செப வாழ்விற்கு சான்று பகர தவறி விடுகிறார்கள். இதனால் மனித பலவீனங்களான மனச்சோர்வு, கோபம், குற்ற உணர்வு, பகைமை, நம்பிக்கையின்மை போன்றவற்றால் பாதிக்கப்படுகின்றனர். பலருடைய மீட்புக்காக தம் உயிரையே கையளித்த (மத். 20:28) இயேசுவின் தியாக உள்ளத்திற்கு நம் குருக்கள் சில வேளைகளில் சான்றுபகரத் தவறி விடுகிறார்கள். எனவே குருக்களுக்குரிய இறைப் பண்பு குருக்களில் மிளிர்வதைவிட மனித பலவீனங்கள் அதிகம் காணப்படுகின்றன. குருத்துவப் பணி வாழ்வில் இதுவும் மிகப்பெரிய சவாலாகும். இயேசுவின் சிலுவையில் "கிறிஸ்துவோடு சிலுவையில் அறையப்பட்டிருக்கிறேன். எனவே இனி வாழ்பவன் நானல்ல, கிறிஸ்துவே என்னில் வாழ்கிறார்" (கலா 2:19-20) என்ற புனித பவுலின் மனநிலையில் ஒவ்வொரு குருவும் கிறிஸ்துவோடு தன்னையே ஐக்கியப் படுத்திக்கொள்ள வேண்டும்.

அப்பொழுதுதான் அவரில் நிலைத்திருப்போம், மிகுந்த பலன் தருவோம் (யோவா 15:5).

## முடிவாக

குருத்துவப் பணிவாழ்வு என்பது ஓர் ஆன்மிகப் போராட்டம் என்பதை மறுக்க முடியாது. ஆனால் இயேசு குருக்களிடம் எதிர்பார்க்கும்

**உலகில் கிறிஸ்துவின் பணியாளர் என்ற மனநிலை மட்டும் கொண்டு ஒவ்வொரு குருவும் வாழவேண்டியது அவசியம்.**

மேலான ஆன்மிக நிலையை அடைய வேண்டும் என்றால் குருத்துவப்பணிவாழ்வில் சந்திக்கும் சவால்களை ஏற்றுத்தான் ஆக வேண்டும். இஸ்ரயேல் மக்கள் எகிப்திலிருந்து வாக்களிக்கப்பட்ட நாட்டை அடைவதற்கு பல சவால்களை ஏற்கவேண்டி இருந்தது. மேற்கண்ட சூழல்கள் மட்டுமல்ல, ஒவ்வொரு குருவிடமும் இருக்கின்ற தனி மனித பலவீனங் களும்கூட பணி வாழ்வின் சவால்களே. இவை யாவும் பிரச்சனைகளோ அல்லது தீர்க்க முடியாத துன்பங்களோ அல்ல மாறாக நாம் சந்திக்கும் சவால்கள் என்று நினைத்து இறை நம்பிக்கையோடும் மக்களை இறைவனுக்கு உகந்த பலியாக கட்டி எழுப்ப வேண்டும் என்ற (உரோ 15:16) உறுதிப்பாட்டோடும் ஒவ்வொரு குருவும் செயல்பட அழைக்கப்படுகின்றார். நம் ஆண்டவர் இயேசு தம் திருத்தூதர்களாக அழைத்த பன்னிருவரும் பன்னிரு மனநிலைகளைக் கொண்டிருந்தனர். வெவ்வேறு அறிவு நிலைகளையும் பண்புகளையும் வெளிப்படுத்தினர். இருப்பினும் யூதாசைத் தவிர மற்ற யாவரும் இயேசுவுக்குத் தங்களையே அர்ப்பணித்ததால் புனிதர்களாகவும் இயேசுவுக்கு தங்கள் உயிரையே அளித்த மறைச்சாட்சிகளாகவும் மாறினர். அதுபோன்றே போராட்டம் நிறைந்த இந்த உலகில் கிறிஸ்துவின் பணியாளர் என்ற மனநிலை மட்டும் கொண்டு ஒவ்வொரு குருவும் வாழவேண்டியது அவசியம். தங்கள் பணி வாழ்வில் தங்களை முன்வைக்காமல் இயேசுவையும் மக்களையும் முன்வைத்து வாழ்ந்த புனித அசிசியார், தந்தை தாமியன், தந்தை பியோ, அன்னை தெரசா, போன்றவர்கள் குறிப்பாக புனித ஜான் மரி வியான்னி இவர்கள் யாவரும் குருக்களின் வாழ்வுக்கும் பணிக்கும் சிறந்த எடுத்துக்காட்டு களாக உள்ளனர். குருத்துவ வாழ்வு என்பது மக்களுக்குப் பணி செய்ய கடவுள் அளிக்கும் கொடை. இறைத் திட்டத்தின்படி மக்களுக்குப் பணி செய்யும்போது அதுவே இறைப் பணியாகவும் மாறுகிறது. இதைத் தான் குருக்களின் பாதுகாவலரான புனித ஜான் மரி வியானி ஒவ்வொரு குருவுக்கும் தெரிவிக்கிறார்.

அருள்பணி. A. பீட்டர் அபீர்

# கல்வியின் சிறப்பு

ஏன் என்ற கேள்வி இல்லாமல் வாழ்க்கை இல்லை. ஒவ்வொரு செயல்பாட்டிற்கும் காரணம் அறிந்து அந்தச் செயல்பாட்டின் அகஇயல்பை அறிந்து கொள்வதுதான் அறிவுத் திறன். காலவெள்ளோட்டத்தில் மக்களினங்கள் அறிவில் சிறந்து தங்களின் சூழலுக்கு ஏற்ப மரபுகளையும், நாகரீகத்தையும் உருவாக்கினர். பாரசீக நாகரீகம் ஒருவிதம், பாபிலோனிய பண்பாடு ஒருவிதம். மண்ணின் மணமும், இயற்கையின் நியமமும் அறிவு செறிந்த வாழ்க்கைக்கு வழிகாட்டின. படைப்பின் சிகரமாக இருப்பவன் மனிதன். அவனுக்குக் கீழ்தான் மற்ற உயிரினங்கள் என்ற நியதி ஒருபுறம் இருந்தாலும், பரிணாம வளர்ச்சிக் கருத்தை முன்வைக்கும் டார்வினின் கொள்கையானாலும் மனிதனுக்குக் காலம் வளர்ச்சியைக் கொடுத்து முன்னேற்றப் பாதையில் அவனை இட்டுச் செல்கிறது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. கடந்த 50 ஆண்டுகளில் மனிதன் கண்ட அறிவியல் வளர்ச்சி அதற்கு முன்பு இருந்த யுகங்களில் காணவில்லை. அதற்கான தேவையும் இல்லை. ஆறு அறிவு கொண்ட மனிதனுக்கு ஏட்டறிவு ஒருபுறம், பட்டறிவு மறுபுறம். "பறவையைக் கண்டான் விமானம் படைத்தான், பாயும் மீனைக் கண்டான் படகினைப் படைத்தான். எதிரொலி கேட்டான் வானொலி படைத்தான்" என்ற கவிதை மனித பட்டறிவிற்கு பலனாக அமைகின்றது.

**கல்வியின் நிலை**

அறிவை வளர்ப்பதற்கு கல்வி ஓர் அரிய கருவியாக உள்ளது. கால வெள்ளோட்டத்தில் கல்விமுறை மாறியது. குரு சீடர் என்று ஒருவருக்கு ஓர் ஆசான் என்ற நிலை இருந்தது. அரசக் குழந்தைக்கு ஆசான் அரண்மனைக்குச் சென்று கற்றுக்கொடுத்து வந்தார். பிறகு பல குழந்தைகள் ஓர் ஆசானிடம் கற்று வந்தனர். கால அடையாளங்கள் கல்விக்கூடங்களை உருவாக்கின. இன்று காணப்படும் கல்விக்கூடங்கள், கல்லூரிகள் என்ற கல்விமுறை எதார்த்தமாயிற்று. இன்றைய உலகில் கல்வி வாழ்வை வளமாக்கும் வழிமுறை என்ற நிலை மாறி வியாபாரமாக மாறிவிட்டது. சிறப்புப் பாடங்களாக மருத்துவம், பொறியியல், நீதித்துறை, வணிகவியல் மற்றும் பல பாடப்பிரிவுகளைக் கொண்டுள்ளன. பாடங்களின் முக்கியத்திற்கேற்பக் கல்விக் கூடங்கள் நன்கொடை வசூல் வேட்டையாடுகின்றன. பாடத்திற

கேற்ப ஒரு இலட்சத்திலிருந்து ஐம்பது இலட்சம் வரை நன்கொடை பெறுகின்றன. பாகுபாட்டை நீக்கிட வழியாக அமைந்த கல்வியே பாகுபாட்டை உருவாக்கி அதை உறுதிப்படுத்துகின்றது.

ஒரு நிகழ்வு. அது ஒரு பெண்கள் உயர்நிலைப் பள்ளியிலுள்ள உள்விடுதி. பொருளாதார நிலைக்கேற்ப உணவில் முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பு என்று இருந்தன. இஃது சகித்து ஏற்கக் கூடிய நிலை. ஆனால் ஒழுக்கத்தைக் கற்றுக்கொடுக்கும் அவர்கள் பாகுபாடு பார்த்தார்கள். விடுதியைப் பெருக்கி சுத்தம் செய்பவர்கள் இரண்டாம் வகுப்பு உணவு உண்ணும் மாணவிகள். முதல் வகுப்பு மாணவிகளுக்கு இக்கடமையிலிருந்து விதிவிலக்குக் கொடுத்தார்கள். உணவில் பாகுபாடே கற்றுத்தரும் கல்விக்கு இழுக்கு. ஆனால் ஒழுக்கத்திற்கே விதிவிலக்கென்றால், முதல் வகுப்பு உணவு உண்ணும் மாணவி பிற்காலத்தில் திருமணம் முடித்தால் வீட்டு வேலையைச் செய்ய ஒரு பணிப்பெண் இருந்தால்தான் திருமணம் செய்துகொள்வதாக அடம்பிடிக்கமாட்டாரா?

**பண்பாட்டைப் பேணும் கல்வி**

ஒவ்வொரு நாட்டிற்கும் இனத்திற்கும் வாழ்வு முறைக்கும் ஏற்றவாறு மக்களின் மனங்களில் மண்ணின் மணம் வீசும் பண்பாடு மலருகின்றது. மனித பரிணாம

பாளை புனித சவேரியார் கல்லூரியில் MSW பயிலும் எம் மகன் ஒரு விண்ணப்பப் படிவத்தில் எமது பெயர், மற்றும் குறிப்புகளை எழுதிச் சென்றிருந் தான். ஒரு நாள், ‘அப்பா உங்கள் வேலை என்ன? Evangelist என நிரப்பவா?’ எனக் கேட்டான். அந்த சமயம் நானும் அங்கு சென்றிருந்தேன். ஆங்கிலத்தில் Catechist என்று நிரப்பும்படி கூறினேன். கூறிவிட்டு நானும் ஸ்பெல்லிங் கிற்காக எனது பையில் உள்ள புதிய ஏற்பாட்டை திறந்தபோது அந்த புதிய ஏற்பாட்டில் இருந்து எனது பெயருக்கான முகவரிகள் இடம் பெற்றன.

1. Mr. S. Joseph, Evangelist என்றும்
2. Mr. S. Joseph, Catechist என்றும் இரண்டு தகவல்கள் இருந்தன.

Catechist என்ற லிஸ்டில் திருமறைப் பணி நிலையம், ஆயர் இல்லம், தூத்துக்குடி - 628 001 என்ற முகவரியும், Mr. S. Joseph, Evangelist என்ற லிஸ்டில் 7/10 இராயபுரம், சாயர்புரம் 628201 என வீட்டு முகவரியும் இருந்தது.

எனவே நான் வீட்டு முகவரியில் கத்தோலிக்க நற்செய்தி அறிவிப்பாளனாகவும், அலுவலக முகவரியில் Catechist உபதேசியார் மறைக்கல்விப் பணியாளராகவும் இருப்பதை உணர்த்தியது .

ஆம். தமிழக வேதியர்களுக்காக ‘வேதியர் கையேடு’ - நற்செய்திப் பணியாளர் வேதியர் கையேடு என்றும் குறிப்பிடப்பட்டு இருந்தது. எனவே வேதியர் ஒவ்வொருவருமே நற்செய்தி அறிவிப்புப் பணியாளராக செயல்பட தூய ஆவியார் ஆழமாக உணர்த்துவதால், நற்செய்தி அறிவித்து இயேசுவின் இறையரசைக் கட்டி எழுப்புவோம்.

**வேதியர் ஜோசப்**

வளர்ச்சியில் பண்பாடு மிகவும் அடிப்படையாக உள்ள ஓர் அங்கம். பண்பாடு வேறுபடும். ஆனால் பண்பாட்டில் ஏற்றத்தாழ்வு என்றில்லை. வேட்டி கட்டும் பண்பாடு குழாய் டவுசர் அணியும் பண்பாட்டிலிருந்து மாறுபட்டுள்ளது.



ஆனால் குழாய், வேட்டியை ஏற, இறங்கப் பார்க்கின்றதெனில் உயர்வு தாழ்வு உருவாகின்றது. உயர்வு தாழ்வைப்பற்றி இயேசுக் கற்றக்கொடுக்கும்போது பரிசேயரும் ஆயக்காரரும் இறை வேண்டல் செய்த முறையைச் சொல்லுகின்றார். பரிசேயர் தற்புகழ்ச்சியோடு ஆயக்காரரோடு ஒப்புமைப்படுத்தினார். தன்னை உயர்ந்தவரென்றும் மற்றவரைப் பாவி என்றும் இறை முன்னிலை யில் அறிக்கையிடுகின்றார் (லூக் 18:9-14). தமிழ் மூதாட்டி ஔவையார் கூற்றிற்கேற்ப, "சாதி இரண்டொழிய வேறில்லை. சாற்றுங்கால், இட்டார் பெரியோர், இடாதார் சிறியோர் பட்டாங்கி லுள்ளபடி."

அன்பே பண்பாக வாழ்வில் அமைய வேண்டும் என இயேசு ஓர் உவமையின் வாயிலாகக் கூறுகின்றார். எருசலேமிலிருந்து எரிக்கோவிற்குச் சென்ற ஒருவர் கள்வர் கையல் அகப்பட்டார். அவரை குற்றுயிராக விட்டுச் சென்றனர். அவ்வழியே குரு ஒருவர் சென்றார். துன்புறும் சோதரனைக் கண்டார். ஒதுங்கிச் சென்றார். அதன்பின் லேவியர் சென்றார். அவரும் ஓரக்கண்ணால் பார்த்து, ஒதுங்கிச் சென்றார். இறுதியாக சமாரியர் ஒருவர் சென்றார். ஈர இதயம் கொண்ட அவர் காயப்பட்டவருக்கு மருந்திட்டு சத்திரத்திற்கு இட்டுச்சென்று தொடர் பராமரிப்பிற்கு ஆவன செய்தார். இம்மூவரில் பண்பாளர் சமாரியரே என்று திருச்சட்ட அறிஞருக்கு கற்றுக்கொடுத்தார் இயேசு (லூக் 10:25-34). தொடர்பைத் துண்டித்து உறவற்றவர்களாக கல்லறை களிலும் குகைகளிலும் ஒதுங்கி வாழ நிலைப்பட்டவர்கள்தான் தொழுநோயாளர்கள். இயேசு எருசலேமிற்குச் செல்லும் வழியில் பத்துத் தொழுநோயாளர்கள் அவரை

அணுகி நலம்பெற வேண்டினர். இயேசுவும் நலம்பெறச் செய்து அவர்களை குருக்களிடம் காட்ட அனுப்புகின்றார். செல்லும்போது நோய் நீங்கிற்று. ஒன்பதுபேர் யூதர். ஒருவர் சமாரியர். குணம் பெற்றதைக் கண்ட சமாரியர் மீண்டும் இயேசுவிடம் திரும்பி வந்து நன்றி கூறினார் (லூக் 17:11-19). "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்நன்றி கொன்ற மகர்க்கு" என்ற வள்ளுவரின் வாக்கு பண்புடையரின் தன்மையை எடுத்தோதுகின்றது.



பண்பாட்டைக் கற்றுக் கொடுக்க இயேசு பல வழிகளைச் சொல்லி இருக்கின்றார். பிறருக்கு விருந்து கொடுக்கும்போது உனது உறவினர்களுக்கும், வேண்டப் பட்டவர்களுக்கும் மட்டும் எதிர் பார்ப்போடு விருந்து படைக்காதே. ஏனெனில் அவர்களும் இச் செயலுக்கு நன்றியாக உனக்கு விருந்து படைக்கலாம். அதனால் வரும் நன்மை என்ன? ஆனால் விருந்து கொடுக்கும்போது இல்லா தவர்கள், இயலாதவர்கள், தங்கள் நன்றியை இதயத்திலும் உணர்விலும் மட்டும் காட்டத் தெரிந்தவர்கள் ஆகியோருக்குச் செய்யுங்கள். இதைக் காணும் விண்ணகத் தந்தை கைம்மாறு தருவார். இஃதே பண்பு, மாண்பு, மகிமை, மகத்துவம். இஃது இறைவன் வங்கியில் கணக்கு வைத்து அருள் சேர்க்கும் பழக்கம் (லூக் 14:12-14). பகிர்வுப் பண்பாடு இல்லாத செல்வர் ஒருவர் தினமும் மிக உயர்ந்த உணவை உண்டு வந்தார். ஆனால் அவரின் வீட்டு வாசலில் ஏழை இலாசர் பசியோடு வாடினார். செல்வர் உண்டதுகூட தவறில்லை. மாறாக, தேவைப்படும் சகோதரருக்குக் கொடுக்காமல் உண்டதுதான் பண்பற்ற செயல். இலாசரின் ஏழ்மை செல்வருக்குக் கற்றுக் கொடுத்தது (லூக் 16:19-31). இயேசு கற்றுக்கொடுத்த பண்பாட்டுக் கல்வி அவரது மதிப்பீடுகளைத் தாங்கிச் செல்லவேண்டும் என்ற ஒரே நோக்கம்தான்.

## ஒழுக்கம் ஓம்பும் கல்வி

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்று வள்ளுவர் ஒழுக்கத்தின் உயர்வு உயிரையும் விலைபேசும் என்று உள்ளது. ஒழுக்கம் அகவாழ்வை இயக்கு வதற்கு உள்ள ஆற்றல். இந்த

ஆற்றலை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்று சொல்லுவதுதான் அறிவுத் தெளிவுபடுத்தும் கல்வி. எது நேர்மறை எதார்த்தம், எது எதிர்மறை அம்சம் என்று ஆய்ந்து அறிவதற்கு ஓர் ஆதாரம். அறிவு பகுப்பாய்வு செய்யும்போது தவறு வதற்கு வாய்ப்பு உண்டு. ஆனால் இயேசுவின் இயல்பான ஞானம் ஆசானாக இருந்து கற்றுக் கொடுத்தால் அதில் எதிர்மறைக்கு வாய்ப்பே இல்லை.

இயேசுவின் ஞானம் கற்றுத் தரும் மதிப்பீடுகள் பலவேளைகளில் அறிவு கற்றுத்தரும் மதிப்பீடு களோடு உரசிப் பார்க்கையில் எதிரும் புதிருமாக அமையும். ஒழுக்கத்தின் விழுமியங்கள் அனைத்தும் ஒருங் கிணைந்த நிலையில் பல்வேறுபட்ட வாழ்வின் பாதையில் நடந்த மக்களுக்கு இயேசு கற்றுக்கொடுத்தார். மலைப் பொழிவு அல்லது சமவெளிப் பொழிவு என்றுள்ள போதனையில் மிக அழகாக, அழுத்தமாக, அறிந்துகொள்ளும் திறனுக்கேற்பப் போதித்தார். மண்ணுலகில் ஏழைகள் பேறுபெற்று விண்ணரசை உரிமையாக்குகின்றனர் (மத் 5:3). இதே ஏழைகள்தான் தங்களுக்கு உள்ளவைகளை நீதியின்படி பெற உரிமையிருந்தும் அந்த நீதிக்காக துன்புற்று இருப்பதால் விண்ணரசை உரிமையாக்குகின்றனர் (மத் 5:10). துன்புறுவோருக்கு ஆறுதலும் (மத் 5:4), நெகிழ்ந்த நெஞ்சுடையோர் நாட்டை உரிமையாக்குகின்றனர் (மத் 5:5). நீதி வேட்கை கொண்டோர் நிறைவு பெறுதல் (மத் 5:6), ஒழுக்கத்தின் சிகரமாம் இரக்கம் கொண்டோர் இரக்கத்தையே பெறுகின்றனர் (மத் 5:7). தூய உள்ளத்தோர் கடவுளைக் காண்பது (மத் 5:8) உருவாக்குவோர் கடவுளின் மக்கள் (மத் 5:9). இயேசுவின் பொருட்டு ஒன்றுக்கு நூறாய் இட்டுக்கட்டி மற்றவர்கள் இகழும்போது மகிழ வேண்டும்.



அப்படிச் செய்தால் விண்ணரசு உரிமையாகும் (மத் 5:11). நேர்மறை விழுமியங்களில் இருப்பவர்கள் உறுதியாக இருக்க வேண்டும் என்று வாழ்த்தும் அதே வேளையில் எதிர்மறை விழுமியங் களை உள்வாங்கியுள்ளவர்களை எச்சரித்துக் கற்றுக்கொடுக்கின்றார் இயேசு. பணக்காரர்கள் தன்னலத் தோடு வாழ்ந்தால் அவர்களுக்குக் கேடு (லூக் 6:24) வரும் என எச்சரிக்கின்றார். விண்ணரசுக்கு உரியவர்களை ஏழைகளுக்கு மறைநூல் அறிஞரும், பரிசேயரும்

விண்ணரசின் கதவுகளை அடைத்து விடுகின்றனர் (மத் 23:13). இறை மதிப்பீடுகளையும் மரபுகளையும் அர்த்தம், அதிர்வு இவைகள் இல்லாத வளர்ச்சியற்ற, பட்டுப் போன அம்சங்களாக மாற்றிவிடும் பரிசேயர்களும் அறிஞர்களும் கேட்டிற்கு உள்ளாக நேரிடும் என இயேசு எச்சரிக்கின்றார் (மத் 23:14-36).

உவமைகளின் வாயிலாக இயேசு மக்களுக்கு நியமங்களைக் கற்றுக் கொடுத்தார். விதைப்பவரின் உவமையில் தங்களின் திறனுக் கேற்ப 100, 60, 30 மடங்குகள் பலன் கொடுக்க இயலும் என்று மேலோட்ட புரிதலைப் பொதுவாகச் சொன்னார். இதை புரிந்து கொண்டாலே அவர்கள் உயர்வு பெறுவர் (மத் 13:1-9). ஆனால் உவமையின் நோக்கத்தை ஆழமாகப் புரிந்துகொள்ள தம் சீடர்களுக்கு விளக்கிச் சொல்லு கின்றார். மக்களின் மனம் விளை நிலம்; விதைக்கப்படும் விதை இறைவார்த்தை, மனப்பக்குவம் எப்படியோ அப்படியே இறை வார்த்தை பலன்தரும் (மத் 13:18-23). ஒழுக்கம் ஒரு புதையல். மற்ற எல்லாவற்றையும் தியாகம் செய்து இந்தப் புதையலைப் பெறவேண்டும் (மத் 13:44). இறைத்திட்டம் ஒரு வலை. கடவுள் கொடுக்கும் மதிப்பீடுகள் வலையில் படும் நல்ல மீன்கள். அதே சமயம் அதே வலையில் சிக்கும் எதிர்மறைக் குணங்களான கெட்ட மீன்கள் வெளியில் கொட்டப்படுகின்றன (மத் 13:47-50).

சொல்லில் மட்டும் கற்றுக் கொடுத்துவிட்டு கடமை முடிந்து விட்டது என்று இயேசு எண்ண வில்லை. தம் வார்த்தைக்கு வாழ்வில் வடிவம் கொடுத்தார். மனிதன் எந்த வலியையும் தாங்கிக் கொள்ளுவான். ஆனால் மன்னிப்பால்



வரும் வலியைத் தாங்க இயலாது. ஊதாரிப்பிள்ளையின் உவமையில் மன்னித்த தந்தையைப்போன்று இயேசு பேதுருவிடம் ஒரு சகோதரனை மன்னிப்பது ஏழுமுறை மட்டுமல்ல எழுபது முறை ஏழுமுறை என்றார் (மத் 18:21-22). விபசாரத்தில் பிடிபட்ட பெண்ணை இயேசுவிடம் பரிசேயர் களும் சதுசேயர்களும் மூப்பர்களும் அறிஞர்களும் கொண்டுவந்தனர். இவர்கள் பகலில் பசுமாடு தெரியாதவர்கள். இரவில் எருமை

மாட்டைத் தேடுபவர்கள். பாவம் இல்லாதவன் முதல் கல்லெறியட்டும்

> **"தந்தையே இவர்களை மன்னியும். ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை" (லூக் 23:34).**

என்றதும் கற்கள் கையி லிருந்து விழுந்தன. தீர்ப்பிட வில்லையா? பெண்ணே. நானும் தீர்ப்பிடேன், என்றார் (யோவா 8:1-11). மரபுகளை மறந்த யூதத்தலைவர்கள் மாற்றானின் மரபுக்கு இயேசுவை உட்படுத்தி சிலுவை மரணம் கொடுக் கின்றார். சிலுவையில் தொங்கும்போது தன்னை வதைத்தவர்களுக்கு அவர் தந்த மிகப் பெரிய தண்டனை "தந்தையே இவர்களை மன்னியும். ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை" (லூக் 23:34). அரசியலுக்கும் உரிய இடம் கொடுக்க வேண்டும் என ஒழுக்கம் கூறுகிறது. பரிசேயர்கள் சீசருக்கு வரி செலுத்த வேண்டுமா என்று கேட்டபொழுது, ஆண்டவருக்கு உரியதை ஆண்டவருக்கும் சீசருக்குரியதை சீசருக்கும் கெலுத்த வேண்டும் என்றார் (மத் 12:13-17).

பகிர்வைப்பற்றியும் கற்றுக் கொடுக்கின்றார் இயேசு. தம் வார்த்தையைக் கேட்க வந்தவர்கள் பசியோடு இருப்பதை அறிந்து ஒருமுறை நாலாயிரம் பேருக்கும் (மாற் 8:1-8), மறுமுறை ஐயாயிரம் பேருக்கும் அப்பத்தைப் பலுக்கிக் கொடுத்தார் (யோவா 6:1-13). இந்தப் பகிர்வு தற்காலிகப் பகிர்வு. ஆனால் நிரந்தர, முடிவற்ற பகிர்வு தன் உடலைப் பகிர்ந்து கொடுத்ததுதான் (யோவா 6:34-56). கானாவூர் திருமணத்தில் தண்ணீரைத் திராட்சை இரசமாக மாற்றிய வல்ல செயல். கொடுத்து துன்பத்தைக் குறைத்து மகிழ்வைப் பெருக்கியதும் இயேசுவின் இறைத்தன்மையில் நம்பிக்கை கொள்ள ஓர் வாய்ப்பாக



அமைந்தது (யோவா 2:1-11). தன்மீது நம்பிக்கை கொண்ட சக்கேயுவுக்கு பகிர்வு உணர்வை இயேசுவின் உடனிருப்பு கொடுத்தது. "ஆண்டவரே, என் உடமைகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுத்து

விடுகிறேன்; எவரையாவது பொய்க் குற்றம் சுமத்தி எதையாவது கவர்ந் திருந்தால் நான்கு மடங்காகத் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்" (லூக் 9.1-10). பிறருக்குப் பணிவதே பகிர்வு என்ற நிலையில் தலைவனான தானே தாழ்ந்து தமது சீடர்களின் பாதங்களைக் கழுவுகின்றார். அதுமட்டுமல்ல, தனது எடுத்துக்காட்டைப் பின்பற்றி அவர்களும் அப்படி வாழ்வில் அன்புடன் பணிசெய்ய வேண்டும் என்றார் (யோவா 13:1-17). இவ்வகையான அன்பு செய்தால் இயேசுவின் அன்பைப் பகிர்கின்ற வர்களாகக் காணும்போது அவர்கள் அவரின் சீடர்கள் என உலகம் அறிந்து கொள்ளும் (யோவா 13:31-35). தொடக்கத் திருச்சபையில் இயேசுவின்மீது நம்பிக்கை கொண்டோரின் வாழ்க்கை முறை மற்றவர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. எல்லா உடமைகளை யும் பொதுவாக வைத்திருந்தனர். அவர்கள் தேவைக்கேற்ப பகிர்ந் தெடுத்தனர் (திப 2:42-47).

தமது சீடர்களும் சீடர்களின் வழியாக தம்மீது நம்பிக்கை கொள்பவர்களும் அவர் கற்றுத்தந்த பாடங்களையும் அவைகளை மனதிலிருத்தி வாழவேண்டும் என்று தந்தையிடம் உருக்கமாக இயேசு வேண்டுகின்றார். தந்தை இயேசுவிடம் ஒப்படைத்தவர் களுக்கு அவரின் திருப்பெயரை வெளிப்படுத்துவதே அவரது பணி. அவரின் சீடர்களும் இறை வார்த்தையைக் கடைபிடித்தனர். தாம் தந்தையிடம் கற்றதை, பெற்றதையே தம் சீடர்களுக்குக் கற்றுக்கொடுத்தார் (யோவா 17:6-9). தம் சீடர்களை உலகிலிருந்து எடுத்துவிடவேண்டும் என்று வேண்டவில்லை. மாறாக, தீயவனி டமிருந்து காத்தருள வேண்டும் என வேண்டினார் (யோவா 17:15). சீடர்களின் வழியாக இயேசுவையும் அவர் கற்றுத்தந்த மதிப்பீடுகளை யும் நம்புகின்றவர்களுக்காகவும் வேண்டுகின்றார் (யோவா 47:20). இயேசுவை வாழ்வின் மையமாக வைத்து அவர் கற்றுத்தந்துள்ளவை களைக் கடைபிடித்து அதை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்வதே இயேசுவின் கற்றுத் தரும் விதிமுறை.

**தம் சீடர்களை உலகிலிருந்து எடுத்துவிடவேண்டும் என்று வேண்டவில்லை. மாறாக, தீயவனிட மிருந்து காத்தருள வேண்டும் என வேண்டினார்.**

யூத சமூகத்திலும் சரி, கிறித்துவச் சூழலிலும் சரி ஒழுக்க நெறிகளைச் சொல்லும்போது பெண்களை இரண்டாம் நிலையின

ராகக் கருதும் மரபு இருந்தது, இருந்து வருகின்றது. இயேசுவின் பார்வையில் பெண்களுக்கு உரிமை உண்டு என்பதை உறுதியாகச் சொல்லியுள்ளார். சமுதாயம் புறக் கணித்த பெண்களை இரக்கத் தோடு நோக்கினார். சமுதாயத்தின் அறியாமையை அகற்றினார். பேதுருவின் மாமியார் காய்ச்சலாய் இருந்தபொழுது அவரை குண மாக்கினார் (மத் 8:14-17). பன்னி ரெண்டு ஆண்டுகளாக இரத்தப் போக்கினால் வருந்திய பெண்ணை நலம்பெறச் செய்தார் (லூக் 8:43-48). யாக்கோபின் கிணற்றில் இயேசு சமாரியப் பெண்ணை சந்தித்து அருள்கூர்ந்து இருக்கின்றார். சமாரியப் பெண் இரட்டிப்புப் பாதிப்பை இயேசுவிடம் கூறுகின்றார். யூதரான இயேசு சமாரியப் பெண்ணான தன்னிடம் பேசுவது எப்படி? அதுவும் தான் பெண்ணாக இருந்ததால் அதுவும் பாதிப்புத்தான் (யோவா 4:1-26). மரியா, மார்த்தா இவர்கள் இயேசுவின் நெருங்கிய நண்பர்கள்(லூக் 10:38-42). பரிசேயர் வீட்டில் இயேசு உணவு அருந்துகையில் பாவியானப் பெண் இயேசுவைத் தொட்டார் என்ற நிலை பரிசேயரைப் பதைக்க வைத்தது. ஆனால் இயேசு அன்பு செலுத்துவது மிகவும் மேல் என்று அப்பெண்ணுக்குச் சார்பாக நிலைப்பாடு எடுத்தார் (லூக் 07:36-50). மக்கள் காணிக்கைச் செலுத்துவதைக் கவனித்துக் கொண்டிருந்தார். எல்லாரும் இருப்பதிலிருந்து காணிக்கை போட்டார்கள். ஆனால் ஓர் ஏழைக் கைம்பெண் தனக்குள்ளதான இரு செப்புக் காசுகளையும் காணிக்கை செலுத்தியதைப் பெருமையோடு இயேசு புகழ்ந்தார் (லூக் 21:1-4). இறுதியாக உயிர்ப்பின் மகிழ்ச்சிச் செய்தியை இயேசு பெண்ணிடம் தான் முதலில் கூறினார் (லூக் 24:1-12). இயேசு கற்றுக் கொடுத்த சமத்துவப் பாடம்தான் பெண்மையை உயர்த்திப் பிடித்தது.

மனித இனம் கடவுள் தரும் ஞானத்தைப் பற்றிக்கொண்டு அந்த ஞானத்தை முதல் நிலையாகவும் அதோடுகூட அறிவு கூறும் அம்சங்களை அரவணைத்துச் செல்லும்போதும் கல்வி என்ற ஊடகம் மனித உயர்வுக்கு உதவும் கருவியாக இருக்கும். இதை மனதில் வைத்துக் கொள்ளாதவர் கள் இக்கல்வியை வியாபாரமாக்கிக் கொண்டு தாங்களும் மற்றவர்களும் திசைமாறிச் செல்ல முயல்கின்றனர். கல்விப் பண்பாட்டையும் ஒழுக்கத் தையும் இயேசு கற்றுத்தரும் வழியில் பயன்படுத்தினால் 'சென்று கற்றுக்கொடுங்கள்' என்று கூறும் வார்த்தைகள் மனமென்னும் நிலத்தில் விழுந்து நூறு மடங்கு பலன் தரும் என்பதில் ஐயமில்லை.

பெ. கல்லரசு - எம்மாவுஸ்

# நடைபெற்றத் திருவழிபாட்டுக் கருத்தரங்குகள்

கடந்த மாதங்களில் திருவழிபாட்டுத் தொடர் பயிற்சிக் கருத்தரங்கு இரு இடங்களில் நடைபெற்றன.

முதலாவது: ஏப்ரல் 28 முதல் மே 2 வரை பாளையங்கோட்டை மறைமாவட்டத்திலுள்ள தேம்பாவணித் தோட்டத்தில் இக்கருத்தரங்கு நடைபெற்றது. இதில் 34 (தூத்துகுடி-15, கோட்டார்-8, பாளையங்கோட்டை - 7, சிவகங்கை - 2, மதுரை- 2) பயிற்சியாளர்கள் பங்குகொண்டனர். அருள்பணியாளர்கள் முனைவர் அருள்சாமி, முனைவர் ஆரோக்கியராஜ், முனைவர் ரோலிங்டன், அமர்சிங், வேதியர் திரு. தாமஸ் கருத்துரைகளை வழங்கினர். பாடற்பயிற்சியை அருள்சகோதரி கோர்துலா (திருச்சி அன்னாள் சபை), அருள்பணி. ரோலிங்டன் வழங்கினர். இவ்வருடம் இரண்டுபேர் மூன்று வருடப் பயிற்சிக்கான பட்டயத்தைப் பெற்றனர். பாளையங்கோட்டை மறைமாவட்ட ஆயர் மேதகு ஜூடு பால்ராஜ் அவர்கள் திருப்பலி நிறைவேற்றி சிறப்பித்தது ஒரு சிறப்பம்சமாக அமைந்திருந்தது.

இரண்டாவது : மே 12 முதல் 16 வரை திண்டிவனத்திலுள்ள முப்பணி நிலையத்தில் இக்கருத்தரங்கு நடைபெற்றது. இதில் 18 (தூத்துகுடி - 1, திருச்சி - 6, செங்கல்பட்டு - 3, கோவை - 1, பாண்டி -2, தர்மபுரி-4, தஞ்சாவூர்-1) பயிற்சியாளர்கள் பங்குபெற்றனர். அருள்பணியாளர்கள் முனைவர் அருள்சாமி, முனைவர் ஆரோக்கியராஜ், முனைவர் ரோலிங்டன், ஜெகராஜ் (திண்டிவனம் பங்குத்தந்தை), திரு.கஸ்பார் கருத்துரைகளை வழங்கினர். பாடற்பயிற்சியை அருள்சகோதரி பெரேரா, அருள்பணி. ரோலிங்டன் வழங்கினர். இவ்வருடம் மூன்றுபேர் மூன்று வருடப் பயிற்சிக்கான பட்டயத்தைப் பெற்றனர்.

இவ்விரு கருத்தரங்குகளில் பட்டயம் பெற்றவர்களுக்கு வாழ்த்துகளும் இக்கருத்தரங்குகள் சிறப்பாக நடைபெற ஒத்துழைத்த அனைவருக்கும் நன்றியும்.

**அருள்பணி. முனைவர் ரோலிங்டன்**
*செயலர், தமிழகத் திருவழிபாட்டுப் பணிக்குழு*
*திண்டிவனம்.*

கேரளாவிலுள்ள பாளை மறை மாவட்டம் மறைப்பணிக்கான பணியாளர் களை அனுப்புவதில் முன்னோடியான மறைமாவட்டம் என்று கருதப்படுகின்றது. இந்தியத் திருச்சபைக்கும் உலகத் திருச்சபைக்கும் அருட்பணியாளர்களையும், அருள்சகோதரிகளையும் அதிக அளவில் வழங்கியிருப்பதே இதற்குக் காரணம். 1995ம் ஆண்டு இம்மறைமாவட்டத்தில் ஒரு களஆய்வு நடத்தப்பட்டது. ஏறத்தாழ 1000 பொது நிலையினரிடம் குருக்களின் வாழ்வு மற்றும் பணி பற்றியக் கேள்விகள் கேட்கப்பட்டன. இந்தக் களஆய்வின் ஒருசில முடிவுகள் பின்வருமாறு: 70 சகவிகித பொதுநிலையினர், குருக்கள் தங்களின் சொந்த நலனை மட்டுமே தேடுகின்றனர் என்றும், ஏறத்தாழ 80 சதவிகிதத்தினர் குருக்கள் எளிமையான வாழ்வு வாழ்வதில்லை என்றும் குறிப்பிட்டிருந்தனர். மேலும், பின்பற்றப் படுவதற்கான சிறந்த முன்மாதிரிகை களாக குருக்களை நாம் எடுத்துக் கொள்ள முடியாது என்று 73 சதவிகிதத்தினரும், ஏழைகள் மற்றும் சாதாரண மக்களின் வாழ்க்கை நிலையிலிருந்து குருக்கள் அந்நியப்பட்டு நிற்கின்றனர் என்று 70 சகவிகிதத்தினரும் குறிப்பிட்டிருந்தனர்.

# புனிதர்களின் பார்வையில் குருத்துவம்

இன்றையச் சூழ்நிலையில் குருத்துவம் எவ்வாறு பார்க்கப்படுகிறது என்பது இது ஒரு சிறு உதாரணம் மட்டுமே! ஒரு பக்கம் பார்க்கும்போது, குருக்களின் வாழ்வும் பணியும் மக்களிலிருந்து அந்நியப்பட்டு, மக்களின் வாழ்க்கைக்கு அர்த்தம் தர இயலாததாக இருக்கின்றது. மற்றொரு பக்கமோ நுகர்வுக் கலாச்சாரம் மற்றும் நவீன மயமாக்கல் ஆகியவற்றால் தூண்டப்பட்டு மக்கள் பொருள்சார்ந்த உலகிலேயே நிறைவைக் காணத் துடிப்பதன் காரணமாக, ஆன்மீகத்திற்கானத் தேவைப் பின்னுக்குத் தள்ளப்பட்டுவிட, குருக்களும் தேவையற்றவர்களாகக் கருதப்படுகிறார் கள். ஏறத்தாழ 45 ஆண்டுகளுக்கு முன்பு இரண்டாம் வத்திக்கான் சங்கம் நடைபெற்றபோது, ஒரு கட்டத்தில் பேசிய கர்தினால் சுவெனன்ஸின் வார்த்தைகள் இன்றையச் சூழ்நிலையில் மிகவும் பொருந்தகக் கூடியவையாக இருக்கின்றன: "தற்போதையச் சூழ்நிலையில் குருக்கள் சந்திக்கின்ற மிகப்பெரிய பிரச்சினை என்னவென்றால் அவர்கள் சமுதாயத்தில் வாழ்கின்ற பெரும்பான்மையானோரால் தேவையற்றவர்களாகக் கருதப்படுவதே! ஆன்மீகம் புறந்தள்ளப்படும் இன்றைய சமுதாயத்தில் புனித இடங்களும், புனித செயல்பாடுகளும் தங்கள் அர்த்தத்தை இழந்துகொண்டிருக்கின்றன. இறையாசீரைப் பெற்றுத்தரக் குருக்கள் தேவையற்றவர்களாகக் கருதப்படுகின் றனர். ஏன், திருச்சபையுமே மக்கள் மத்தியில் தன் முக்கியத்துவத்தை இழந்து வருகின்றது."

இப்படிப்பட்டச் சூழ்நிலையில் பணிக் குருத்துவத்தின் மேன்மை யையும், அவசியத்தையும் எடுத்துச் சொல்வது அவசியமான ஒன்று மட்டு மல்ல, அவசரமான ஒன்றுகூட! இந்தப் பின்னணியில், புனிதர்களில் ஒருசிலர் இந்த பணிக் குருத்தவத்தை எப்படிப் பார்த்திருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

பணிக்குருத்துவமும் கிறிஸ்துவும் பிரித்துப் பார்க்கப்பட முடியாதது என்பதே குருத்துவத்தைப் பற்றிய புனிதர்களின் பார்வையாக இருக்கிறது. "நான் செல்லும் வழியில் ஒரு வானதூதரையும், குருவானவரையும் சந்திக்க நேர்ந்தால் முதலில் குருவானவருக்குத்தான் வணக்கம் செலுத்துவேன். காரணம் வானதூதர் கடவுளின் பணியாளர்தான். ஆனால் குருவானவரோ கிறிஸ்துவின் இடத்தில் இருப்பவர்" என்ற புனித பிரான்சிஸ் அசிசியாரின் வார்த்தைகளில் இவ் வுண்மை பிரதிபலிக்கிறது. குருக்களின் பாதுகாவலராகிய புனித ஜான் மரிய வியான்னி "குருவானவர் யார்?" என்ற கேள்வியை எழுப்பிவிட்டு, அவரே பதில் தருகிறார்: "கடவுளின் இடத்தில் இருந்து, கடவுளின் எல்லா வல்லமைகளாலும் நிரப்பப்பட்ட ஒருவரே குருவானவர்."

அருளாளர் அன்னைத் தெரசாவின் கீழ்க்கண்ட வார்த்தைகளும் குருத்துவத்தின் மேன்மையை நமக்கு எடுத்துரைக்கின்றன: "தன் ஒரே பேறான மகனையே அனுப்பும் அளவுக்குக் கடவுள் இவ்வுலகை அன்பு செய்தார் என்று விவிலியத்தில் வாசிக்கின்றோம். அதே கடவுள் இன்றும், உலகின்மீது தான் கொண்டுள்ள அன்பின் காரணமாக குருக்களை அனுப்பிக் கொண்டிருக்கிறார். எனவே கடவுளிடம் விளங்கும் அன்பின் அடையாளமே குருத்துவம். மனித குலத்தின்மீதான கடவுளின் ஒளிச்சுடரே குருவானவர்."



மேலும் குருத்துவமும் இறையருளின் வாய்க்கால்களான அருட்சாதனக் கொண்டாட்டங்களும் மிகநெருக்கமாகப் பிணைக்கப் பட்டிருப்பதன் காரணமாக குருத்துவமின்றி இறையருளைப் பெற்றுக்கொள்வது இயலாத ஒன்று என்ற பார்வை புனித ஜான் மரிய வியான்னியிடம் காணப்படுகிறது: "திருமுழுக்கின் வழியாக கடவுளின் வாழ்வுக்கு உங்களை அறிமுகப்படுத்தியவர் யார்? குருவானவரே! ஒப்புரவு அருள் அடையாளத்தின் வழியாக நம் ஆன்மாவைத் தூய்மைப்படுத்திக் கடவுளின் முன் நம்மைத் தூயவர்களாக நிறுத்துபவர் யார்? குருவானவரே! சாவின் நிலையில் இருக்கின்ற மனிதனுக்கு நோயில் பூசுதல் வழியாக கடவுளின் வல்லமையைப் பெற்றுத் தருபவர் யார்? குருவானவரே! எனவே கடவுளிடமிருந்து வரும் அருளை எண்ணிப் பார்க்கும்போது, குருத்துவத்தையும் நம்மால் எண்ணிப் பார்க்காமல் இருக்கமுடியாது."

இன்னும் ஆழமாகச் சிந்திக்கும் போது, மற்ற அருளடையாளங்களைவிட, நற்கருணை என்றும் அருளடையாளமே குருத்துவத்தின் மேன்மை மற்றும் உயர்வுக்குமான நேரடிக்காரணமாக அமைகின்றது. இயேசுவைப் பிரசன்னப் படுத்தும் நற்கருணையை ஏற்படுத்தும் உரிமையையும், கொடையையும் குருக்கள் பெற்றிருப்பதே, குருத்துவத்தின் மேன்மைக்கானக் காரணம் என்பதே புனிதர்களின் புரிதலாக இருந்திருக்கிறது. குருக்களை நோக்கி எழுதப்பட்ட கடிதத்தில் காணப்படும் புனித பிரான்சிஸ் அசிசியாரின் கீழ்க்கண்ட வார்த்தைகள் இதை மெய்ப்பிக்கின்றன: "என் சகோதரர்களே! எனக்குச் செவிசாயுங்கள். கன்னிமரியா, தன் உடலில் இயேசுவைச் சுமந்ததன் காரணமாக போற்றப் படுகின்றார் என்றால், இயேசுவின் உடலை தன்னகத்தே சில நாட்கள் கொண்டிருந்த கல்லறை மக்களால் பெரிதும் மதிக்கப்படுகிறது என்றால், அதே இயேசுவை தன் கையால் தொடுகின்ற, மற்றவர்களுக்குத் தருகின்ற ஒருவர் எவ்வளவு புனிதமானவராகவும், தகுதியானவராகவும் இருக்க வேண்டும்!"

புனித பெர்நார்து இதேக் கருத்தை இன்னும் ஒரு கண்ணோட்டத்தில் தருகிறார்: "குருத்துவம் இல்லாத இடத்தில் நமதாண்டவரும் இருக்க முடியாது. காரணம் மக்கள் மத்தியில் கிறிஸ்துவைப் பிரசன்னப்படுத்துபவர் குருவானவரே" என்கிறார்.

புனித சீயன்னா கத்தரீனம்மா ளோடான உரையாடலில், இயேசு இதே உண்மையையே வெளிப்படுத்துகிறார். 'புனித சீயன்னா கத்தரீனம்மாளின் உரையாடல்' (The Dialogue of St. Catherine of Siena) என்ற புத்தகத்தில் புனித கத்தரீனம்மா ளுக்கும் இயேசுவுக்கு மிடையேயான உரையாடல் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. கத்தரீனம்மாளின் பல கேள்விகளுக்கு இயேசு பதில் சொல்வதாக இப்புத்தகம் அமைந்திருக் கிறது. அதில் ஒரு கேள்வி குருத்துவத் தைப் பற்றியதாக இருக்கிறது. அதற்கு இயேசு தரும் பதில்: "என் அன்பு மகளே, நான் உனக்கு பல்வேறுபட்டக் காரியங்களைச் சொன்னதன் நோக்கம், நீ என் பணியாளர் களின் மேன்மையை இன்னும் தெளிவாக உணர்ந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே! அவர்கள் என்னால் அருள்பொழிவு செய்யப்பட்டவர்கள். என்னையே மக்களுக்கு வழங்குகிற மாபெரும் அலுவலை நான் அவர்களுக்குக் கொடுத்திருப்பதன் காரணமாக, அவர்கள் என் கிறிஸ்துக்கள். திருச்சபையின் மறையுடலில் நான் அவர்களை நறுமணம் வீசும் மலர்களாக வைத்துள்ளேன். ஒரு வானதூதருக்குக் கூட இத்தகைய மேன்மை வழங்கப்பட வில்லை."



இப்படிப்பட்ட மேலான குருத்து வத்தைப் பற்றிப் பேசும் புனிதர்கள், குருக்கள், தங்களின் அழைப்பின் மேன்மையை மனதில் இருத்தி அதற்கேற்றாற்போல வாழ வேண்டும் என்ற செய்தியையும் ஆணித்தரமாக எடுத்துரைக்கின்றனர். தங்கள் குருத்துவத்தின் மட்டில் குருக்களின் பார்வை எத்தகையதாக இருக்க வேண்டும் என்பது பற்றி ஒரு சில புனிதர்களின் பார்வையை கீழே பார்க்கலாம்.

புனித ஜான் மரிய வியான்னி இவ்வாறு எழுதுகிறார்: "திருத்தூதர்கள் உயிர்த்த ஆண்டவரைப் பார்த்தபொழுது எவ்வளவு மகிழ்ச்சி அடைந்தார்களோ, அதே மகிழ்ச்சியை ஒவ்வொரு குருவும் திருப்பலியில் இயேசுவை ஏந்தும்பொழுது பெறவேண்டும். இயேசுவின் திருவுட லையும், திருஇரத்தத்தையும் தாங்கும் குருக்களின் கைகள், குழந்தை இயேசுவைத் தாங்கிய மரியன்னையின் கைகளைவிட மேலானவை அல்லவா?"

புனித பிரான்சிஸ் அசிசியார் குருத்துவத்தின் மேன்மையை ஓர் அறிவுரையாகவே குருக்களுக்கு வழங்குகிறார்: "குருக்களாக இருக்கும் என் அன்புச் சகோதரர்களே, உங்கள் மேன்மையை எண்ணிப் பாருங்கள். கடவுள் தூயவராய் இருப்பதுபோல, நீங்களும் தூயவராய் இருப்பீர்களாக! மேலான பணியைக் கொடுத்து உங்களை மகிமைப்படுத்தியுள்ள இறைவனை நீங்கள் மதித்து மகிமைப்படுத்துவீர்களாக! இக்காரியத்தைச் செய்யாமல் வேறு எதிலும் ஈடுபட்டீர்கள் என்றால் அதைப்போல இரங்கத்தக்க காரியம் எதுவுமில்லை."

அன்னைத் தெரசா, "ஒரு குரு தந்தையாகிய கடவுளோடு ஒன்றாயிருக்க வேண்டுமெனில், மகனோடு ஒன்றித்திருக்க வேண்டும். இதன்மூலம் தந்தை, மகன் மற்றும் தூயஆவி ஆகிய மூவரின் அளவற்ற அன்பை தன் வாழ்க்கை, மனநிலை, செயல்பாடுகள் வழியாக வெளிப்படுத்த அழைக்கப்படுகிறார். காரணம் கடவுள் இந்த உலகை இன்று அன்பு செய்வது, கிறிஸ்துவின் இடத்திலிருக்கும் குருக்கள் வழியாகவே!" என்று குறிப்பிடுகிறார்.



கத்தரீனம்மாளுடனான உரையாடலில் இயேசுவும் குருக்கள் மட்டிலான தன் எதிர்பார்ப்பை முன்வைக்கிறார்: "என் பணியாளர்கள் தங்களது மேன்மையை உணர்ந்து கொண்டார்கள் என்றால், பாவ இருளில் அவர்கள் வாழ மாட்டார்கள். தங்கள் ஆன்மாவைக் கறைப்படுத்த மாட்டார்கள். எல்லா மனிதர்களிடமிருந்தும் தூய்மையையும் அன்பையும் எதிர் பார்க்கும் நான், என் குருக்களிடமிருந்து இன்னும் அதிகமான தூய்மையையும் அன்பையும் எதிர்பார்க்கிறேன். இத்தகைய தூய்மையும் அன்பும் என்னோடுடான உறவில் மட்டுமல்ல, மற்ற மனிதர் களுடனான உறவிலும் விளங்கவேண்டும் என விரும்புகிறேன்."

இறையியலார் தாமஸ் அக்குவினாஸ் தனக்கேயுரிய பாணியில் இக்கருத்தை வெளிப்படுத்துகிறார்: "கிறிஸ்துவின் மறுஉருவான குருவானவர், கிறிஸ்துவைப்போல உலகின் மீட்புக்காக தன்னைக் குருவாகவும், பலிப்பொருளா கவும் ஆக்கிக் கொள்ள வேண்டும். இதுவே ஒரு குருவானவரின் செபத்திற்கும், செயல்பாடுகளுக்கும், உரையாடலுக்கும் உரைகல்லாக இருப்பது. தன்னையே நாள்தோறும் பலியாக ஒப்புக்கொடுப் பதற்கே ஒரு குரு அழைக்கப்பட்டுள்ளார்."

புனித பெரிய கிரகோரியார் இன்னும் ஒருபடி மேலே செல்கிறார். ஒரு குருவின் வாழ்வு எத்தகையதாக இருக்க வேண்டும் என்பதை இவ்வாறு எடுத்துரைக்கிறார்: "திருப்பணியாளர் சிந்தனையில் தூய்மையுள்ளவராகவும், செயல்பாட்டில் முன்மாதிரிகை உள்ளவராகவும், அமைதி காப்பவராகவும் பயனுள்ள சொற்களையே சொல்பவராகவும் இருத்தல் வேண்டும். எல்லோர் மேலும் இரக்கம் காட்டுபவராகவும் குறிப்பாக தியான மனநிலையில் வாழ்பவராகவும் இருத்தல் வேண்டும். நன்மை செய்வோர் அனைவரின் நண்பராக இருத்தல் வேண்டும். நீதியின் அடிப்படையில் பாவிகள் இழைக்கும் பாவத்தின் எதிரியாய் இருத்தல் வேண்டும். அவர் புற பாடுபட்டால் அகவாழ்வை உதாசினப்படுத்துபவராகவோ அல்லது அகவாழ்வின் அமைதிக்காக புற வாழ்வின் கடமைகளை உதறித் தள்ளு பவராகவோ இருத்தல் கூடாது."

எனவே, குருத்துவம் இயேசுவின் தொடர் பிரசன்னத்தை உலகிற்குக் காட்டுகிறது. குருக்களும் மக்களும் குருத்துவத்தின் மேன்மையை உணர்ந்து கொள்ளவேண்டும். அப்படி செய்கையில் உலக வரலாற்றில் இறைவன் விரும்பிய மீட்புத் திட்டம் தொடரும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

**-ஜெ. மரிய அந்தோனி**

*விரகானூர்-மதுரை*

# திருப்புகழ்மாலையின் சிறப்பு

திருத்தந்தை 23-ஆம் அருளப்பர் கூறுவது, திருப்புகழ்மாலை ஓர் இணையற்ற அழகுமிக்க தெய்வீகப் பாடல். அதன் வழியாக இறைவனைப் புகழ்கின்றோம். கடமை உணர்வுடன் செபிக்கும் பொழுது மறையுண்மைகளை தியானிக்கின்றோம். இரண்டாம் வத்திக்கான் சங்கம் இறைபணி கொள்கைத் திரட்டில் கூறியுள்ளபடி புனித வாழ்வின் நிறைவை அடைவதற்கென அமைக்கப்பெற்ற சபைகளின் உறுப்பினர்கள் தங்கள் சபை ஏற்பாடுகளின்படி திருப்புகழ்மாலையின் பொதுசெபம் செய்பவராக இருக்கின்றார் (இறைபணி என் 98) .

## திருப்புகழ்மாலையின் அவசியம்

மனம் தளராமல் எப்பொழுதும் இறைவனை மன்றாட வேண்டும் (லூக் 18:1). திருச்சபை தொடக்க காலத்திலிருந்தே நாள்தோறும் குறிப்பிட்ட நேரங்களிலெல்லாம் செபித்து வந்திருக்கிறது. இப்பழக்கமே காலப்போக்கில் கிறிஸ்துவோடு இணைந்து இறைத்தந்தைக்கும், மனுவுருவான இறைமகன் இயேசு கிறிஸ்துவுக்கும் திருச்சபை செய்யும் திருப்புகழ்மாலையாகத் திகழ்கின்றது. ஒவ்வொரு நாளும் நம் மீட்பராகிய இறைவனோடு இத்திருப்புகழ்மாலை வழியாக ஒன்றிக்கிறோம். திருப்புகழ்மாலையின் பெரும்பகுதி விவிலியத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. திருச்சபையின் முதன்மையான கடமைகளில் இது ஒன்றாகும். திருச்சபையில் பொதுவாகவும், தனியாகவும் மக்கள் செபித்தார்கள். காலப்போக்கில் கிறிஸ்துவோடு இணைந்து கிறிஸ்துவுக்கு திருச்சபை செய்யும் திருப்புகழ்மாலையாக அமைந்தது.

## திருப்புகழ்மாலை திருப்பலியுடன் கொண்டுள்ள தொடர்பு

கிறிஸ்தவ சமூக வாழ்வின் மையமும் கொடுமுடியும் கிறிஸ்துவின் திருப்பலியே. அதிலுள்ள வாழ்த்துகள், நன்றி கூறுதல், வேண்டுதல்கள், மீட்பின் மறைபொருளை நினைவு கூர்தல் விண்ணக மகிமையின் முன்சுவை அனைத்தையும் திருப்புகழ்மாலை வழியாக சுவைக்கின்றோம். திருப்பலியை பயனுள்ள வகையில் கொண்டாடத் தேவையான விசுவாசம், நம்பிக்கை, அன்பு, பக்தி போன்ற மனநிலை உருவாகிறது. திருச்சபையின் அகவாழ்விற்கு ஊட்டம் தரும் முப்பெரும் சாதனங்கள் திருப்பலி, அருள் அடையாளங்கள், திருப்புகழ்மாலை. திருப்பலிக்கு அடுத்தபடியாக செபங்களில் தலைசிறந்த செபம் திருப்புகழ்மாலை.

## மனிதனைப் புனிதப்படுத்துதல்

இறைவனை வழிபடுதல், மனிதனை அர்ச்சித்தல் ஆகிய பண்புகள் திருப்புகழ்மாலையில் நிகழ்த்தப்படுகின்றன. இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே ஒரு பரிமாற்றம் அல்லது உரையாடல்

நடைபெறுகிறது. திருப்புகழ்மாலை செபிக்கும்போது கடவுள் தம் மக்களோடு பேசுகிறார். மக்களோ பாடல்களாலும் செபத்தாலும் அவருக்குப் பதில் உரைக்கின்றனர்.

### விண்ணகத் திருச்சபையோடு போற்றுதல்

திருப்புகழ்மாலையால் திருச்சபை இடைவிடாது கிறிஸ்து வழியாக இறைத்தந்தைக்குப் புகழ்ச்சிப் பலியை ஒப்புக்கொடுக்கின்றது. மணமகனோடு உரையாடும் மணமகன் குரலாகவும் கிறிஸ்து தம் உடலோடு ஒன்றித்துத் தந்தையை நோக்கி எழுப்பும் செபமாகவும் திகழ்கின்றது. திருப்புகழ்மாலையை செபிக்கும் அனைவரும் திருச்சபையின் கடமையை நிறைவேற்றுவது மட்டுமன்றி கிறிஸ்துவின் மணமகன் என்கிற உயரிய பெருமையிலும் பங்குகொள்கின்றனர்.

### இது ஒரு சமூக செபம்



திருப்புகழ்மாலையை நாள்தோறும் செபிக்கக் கடமைப்பட்ட குருக்கள், துறவிகள், ஏனையோரோ இதை குழுவாகக் கூடி செபிப்பதே சிறந்தது என திருச்சபைத் தூண்டுகிறது. திருப்புகழ்மாலை சமூகப் பண்பு கொண்டது. திருச்சபை ஒரு சமூகம். எனவே, அதன் செபமும் சமூகப் பண்பைப் பெறுகிறது.

### காலத்தைத் திருநிலைப்படுத்துகிறது

திருப்புகழ்மாலையைச் செபிப்பதாலும் ஆண்டவரை இடையறாது புகழ்ந்து உலகம் முழுவதன் மீட்புக்காகப் பரிந்து பேசுசிறது. தொன்மையான கிறிஸ்தவ மரபின்படி, இரவும் பகலுமாகிய நாள் முழுவதையும் புனிதப்படுத்தத் திருப்புகழ்மாலை உருவாக்கப்பட்டுள்ளது. நாள் முழுவதையும் புனிதப்படுத்தவும், ஞான பலன் அடையவும் திருப்புகழ்மாலையை குறிக்கப்பட்ட நேரத்தில் செபிப்பது நல்லது.

### கிறிஸ்துவின் பிரசன்னம்

கடவுளுக்கு நிறைவான மாட்சிமையும், மக்களுக்கு மீட்பும் அளிக்கும் பணியை திருவழிபாட்டின் ஒரு பகுதியாகிய திருப்புகழ்மாலை வழியாகவும் செய்கின்றோம். மக்கள் ஒன்றாய் கூடும்போதும், இறைவாக்கு எடுத்துரைக்கப்படும் போதும், திருச்சபை மன்றாடும்போதும் திருப்புகழ்மாலை பாடும்போதும் கிறிஸ்து அங்கு இருக்கின்றார். திருப்புகழ்மாலை கிறிஸ்தவ விசுவாசத்தின் மறைபொருள். இம்மறைபொருளை நம்பவும் கொண்டாடவும் வேண்டும். அதற்கேற்ப

வாழ்ந்து இறை உறவிலே வளரவும் வேண்டும். உயிருள்ள, உண்மையான இறைவனோடு மனிதர்கள் கொள்ளும் உயிரூட்டமான ஆள் உறவே செபமாகும். திருப்புகழ்மாலைக்கு அச்சாணிபோல் முக்கியத்துவம் பெறுவது காலை, மாலை செபங்களாகும். இயேசு கிறிஸ்து மனித இயல்பை ஏற்று மக்கள் குலம் அனைத்தையும் தம்மோடு இணைத்து இறைவனின் புகழ்ச்சிப் பாடலை இசைப்பதன் வழியாக நம்மைத் தமது உடன் பங்காளிகளாக்குகிறார். திருச்சபை நற்கருணை பலியை நிறைவேற்றுவதோடு நின்றுவிடாமல் பிற வழிகளிலும் குறிப்பாக திருப்புகழ்மாலையை செபிப்பதிலும், ஆண்டவரை இடையறாது புகழ்ந்து உலகம் முழுவதன் மீட்புக்காகப் பரிந்து பேசுகிறது (திவ எண் 83).

காலை, மாலை திருப்புகழ்மாலை செபிப்பது துறவோரின் முதற் பணியாகும். திருச்சபையின் பொது செபமாகிய இத்திருப்புகழ்மாலையை செபிக்கும்போது இறைமக்கள் அனைவரும், திருமுழுக்கினால் பெறும் அரசக் குருத்துவத்தில் பங்கு பெறுகிறோம். முறையாக செபிக்கும்போது திருப்புகழ்மாலை மணமகனுடன் உரையாடும் மணமகளின் குரலாக அமைகின்றது. ஏன் தந்தையை நோக்கித் தம் உடலோடு ஒன்றித்துக் கிறிஸ்துவே எழுப்புகின்ற செபமாகவும் திகழ்கின்றது (திவ எண் 84). திருப்புகழ்மாலையை நாம் செபிக்கும்போது கிறிஸ்துவின் மணமகளது மிக உயரிய பெருமையில் பங்கு பெறுகின்றோம். இறைவனுக்கு புகழ்பாடல் பாடும்போது அன்னையாம் திருச்சபையின் பெயரில் இறைவனது அரியணைமுன் நிற்கின்றோம்.

இறைவன் நம்மைத் தேடி வருகின்றார், நம்மோடு உரையாடுகின்றார். நாள் முழுவதும் இறைவனின் பிரசன்னத்தால் புனிதப்படுத்தப்படுகின்றோம். நாம் நமது செபத்தாலும் வாழ்வாலும் அவரை உள்ளுயிராக்கி அவரோடு உரையாட, உறவாட உறுதுணை அளிக்கின்றது. வாடாத மலராகிய செபமாலை, இறைப்புகழ் இசைக்கும் திருப்புகழ்மாலை இரண்டும் எப்போதும் நமது கரங்களில் இருக்க வேண்டும். இறைப்பிரசன்னத்தில் நமது வாழ்வு நிலைத்திருக்க, இறைவார்த்தையுடன் செபிக்க நமக்கு உறுதுணயாக இருக்கின்றது. துறவறக் கடமைகளை நிறைவு செய்வதில் கண்ணும் கருத்துமாக இருக்கத் தூண்டுகிறது. இன்னல் இக்கட்டுகளின்போது ஆறுதலும் வலிமையும் அடைகிறோம். வரவிருக்கும் மாட்சி பற்றிய உறுதி மனதில் வலுப்படுகிறது. திருப்புகழ்மாலை சொல்லுவது நம்மேல் சுமத்தப்பட்ட ஒரு சுமையாகக் கருதாது உழைத்து உலர்ந்து போகும் ஆன்மாவை செபம் என்னும் இனிய சுனையில் சிறிது நேரம் பருகி சுவைத்து பருகி இன்புற்றிட கொடையாக வழங்கப்பட் ஓர் அன்பு கொடை.

சகோ. மரிய அல்போன்சாள் S.A.T.
மரியா மாநிலத் தலைமை சகோதரி, மதுரை.

திருவழிபாட்டின்
இன்றியமையாத குறிப்புகள் - 6

# ஏழு திரிகளின் எழிலோவியம்

ஆயர் நிறைவேற்றும் திருப்பலியின்போது பீடத்தில் ஏழு எரியும் திரிகள் ஏற்றப்பட்டிருக்கலாம் [2001லும் 2002லும் வெளியாகியிருக்கின்ற உரோமைத் திருப்பலிப் புத்தகத்தின் பொதுப் போதனைகளில் (GIRM) இந்தக் குறிப்பைக் காணலாம்.] என்ற திருவழிபாட்டு ஒழுங்குமுறையை கடந்த மாத இதழில் சுட்டிக் காட்டியிருந்தேன் இப்போது அது ஏன் என்று சற்று விரிவாக கீழே சொல்லு கிறேன். அந்த ஏழு தன்னகத்தே கொண்டிருக்கிற எழில் ஓவியத்தை இரசிப்போமோ?







விவிலியக் கருத்தின்படி 'ஏழு' என்ற எண் நிறைவை, முழுமையை, முடிவினைக் குறிக்கும் என்பதை பல புத்தகங்களில்,கருத்தரங்குகளில்,மறையுரைகளில் கேட்டிருப்பீர்கள். இருந்தாலும் இந்த ஏழு கொண்டிருக்கின்ற ஆதிக்கத்தை விவிலியத்தில் முதலில் காண்போம்

## பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும்

'ஏழு' என்ற எண்ணின் பயன் பாட்டை பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் பல இடங்களில் (உ.ம். தொநூ 7:2; 29:18; 41:5; விப 12:15; எண் 23:1; இச 7:1; 2 அர 5:10; திபா 120:164; மத் 18:22; திவெ 1:16; 5:1; 10:4; 12:3; 15:1) பார்த்தாலும் ஏழு திரிகளைப் பற்றி சில இடங்களில் காணலாம்:

அ. ஆண்டவர் மோசேயை நோக்கிக் கூறுகிறார்: "... ஏழு அகல்கள் செய்வாய்; முன் பக்கமாக ஒளி வீசும் முறையில் அவற்றை ஏற்றி வைப்பாய் ..." (விப 25:37);

ஆ.தூதர் செக்கரியாவுக்கு அருளிய காட்சியில் இவ்வாறு இருக்கிறது: "... அக்கிண்ணத்தின் மேல் ஏழு அகல்கள் இருக்கின்றன..." (செக் 4:2);

இ. புனித யோவான் கண்ட காட்சி இது: "... ஏழு பொன் விளக்குத் தண்டுகளைக் கண்டேன் ..." (திவெ 1:12).

இத்தகைய குறிப்புகள் 'ஏழு' என்ற எண்ணின் தனி இடத்தையும் சிறப்பையும் மாண்பையும் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

## ஏழு திரிகள் பற்றிய வல்லுனர்களின் கருத்துகள்

ஏழு திரிகள் தூய ஆவியாரின் ஏழு கொடைகளையும் (எசா 11:2), ஏழு திருச்சபைகளையும் (திவெ 1:4, 11, 20), கடவுளுடைய ஏழு ஆவிகளையும் (திவெ 3:1; 4:5) குறிப்பதாக விவிலிய, திருவழிபாட்டு, இறையியல் வல்லுனர்கள் தங்கள் கருத்துகளைத் தெரிவிக்கின்றனர் [குறிப்பு: கடவுளின் ஏழு ஆவிகள் என்பது தூய ஆவியாரின் ஏழு கொடைகளைத்தான் குறிக்கிறதாம் (எசா 11:2)]. மேலும் அவ்வேழு திரிகள் ஏழு குருத்துவ நற்பண்புகளையும் [Seven-fold Priestly Virtues: முன்மதி (Prudence), தன்னடக்கம் (Temperance), மனோபலம் (Fortitude), நீதி (Justice) போன்ற முதல்நிலைப் புண்ணியங் களும், நம்பிக்கை (Faith), எதிர்நோக்கு (Hope), அன்பு (Charity) போன்ற அருள் வாழ்வு சார்ந்த நற்பண்புகளும் இதில் அடங்கும். இவை கடவுளின் ஏழு ஆற்றல்கள்- Seven Potencies of God - என்கின்றனர் வல்லுனர்கள்.] குறிக்கின்றன என்கின்றனர் அவர்கள். எண் 'ஏழு' மண்ணக முழுமையையும் படைப்பின் ஏழு நாள்களையும் மண்ணகப் பணிக்கான ஏழு திருத்தொண்டர் களையும் ஏழு அருள் அடையாளங்களையும் குறிக்கிறது என்பதும் அவர்களது கருத்து.

## திருவழிபாட்டு இறையியல் கருத்துகள்

ஆயர்கள் கிறிஸ்துவின் மண்ணக பிரதிநிதிகளாக இருக்கின்றனர். அவர்கள் குருத்துவத்தின் முழுமையை பெற்றிருப்பதால் மறைமாவட்ட முழுவதையும் / தலத்திருச்சபை அனைத்தையும் குறிக்கிறவர்கள் ஆகின்றனர்.

திருவழிபாட்டைப் பொருத்தவரையில் ஏழு திரிகளும் தனித்தனித் திருச்சபையை / ஏழு ஆவிகளைத் தனித்துக் குறிப்பிடவில்லை. மாறாக, 'ஏழு'முழுமையைக் குறிப்பதால் ஏழு திரிகள் மறைமாவட்டத்தின் அனைத்து பங்குத் திருச்சபைகளையும் சுட்டிக்காட்டி நிற்கின்றன. அத்திருச்சபைகள் கடவுளின் முன் கூடிநிற்கும் மக்களை மட்டும் குறிக்கவில்லை; மாறாக, அத்திருச்சபைகள் கடவுளின் ஆவிகள் என்பதையும் அவைகள் கடவுளிடமிருந்து பிறந்தவை, கடவுளிடமிருந்து வாழ்வைப் பெற்றிருக்கின்றன என்பதையும் குறிக்கின்றன.

இறுதியாக, இரண்டு, நான்கு, ஆறு திரிகளோ அல்லது ஏழு திரிகளோ, எப்படியாக இருந்தாலும் சரி, நம் ஒவ்வொருவருடைய காணிக்கைகளும் திருச்சபையின் காணிக்கைகளோடு இணைந்திருக்கின்றன என்பதையும் அதிலும் சிறப்பாக விண்ணக அரியணையின்முன் என்றும் உள்ள தலைமைக் குருவாம் கிறிஸ்து ஏற்படுத்திய காணிக்கைகளோடு ஒன்றிணைந்திருக்கின்றன என்பதையும் அந்த எரியும் திரிகள் நினைவுபடுத்துவதை மனதில் கொள்வோம்.

**அருள்பணி. முனைவர் ரோலிங்டன்**
*செயலர்,*
*தமிழகத் திருவழிபாட்டுப் பணிக்குழு, திண்டிவனம்.*

## மறையுரை மொட்டுகள்

அருள்பணி. வ. இரபேல் - திண்டிவனம்

# கிறிஸ்துவின் திருவுடல்இ திரு இரத்தப் பெருவிழா (06.06.2010)

## தொநூ 14:18-20; 1 கொரி 11:23-26; லூக் 9:11ஆ-17.

ஒரு வீட்டில் தாய் சில தின்பண்டங்களைப் பிள்ளைகளுக்குப் பகிர்ந்து கொடுத்துக்கொண்டிருந்தார். தின்பண்டங்களுள் ஓர் அதிரசமும் இருந்தது. அதை எடுக்க இருபிள்ளைகளுக்குள் போட்டி ஏற்பட்டது. அப்போது தாய் அவர்களிடம், ''இந்த நேரத்தில் இயேசு இங்கே இருந்தால் 'தம்பி எடுத்துக்கொள்ளட்டும்' என்று விட்டுக் கொடுத்திருப்பார்'' என்று சொன்னார். அப்போது மூத்த பையன் அதிகாரத்தோடு சொன்னான்: ''சரி! தம்பி இப்போது இயேசுவாக இருக்கட்டும்.''

இயேசு தம்மையே விட்டுக்கொடுத்து நம்முடன் பகிர்ந்து கொண்டதைத்தான் அவருடைய திருவுடல், திரு இரத்தப் பெருவிழாவாகக் கொண்டாடுகிறோம். முதல் வாசகத்தில் மெல்கிசெதேக்கு அப்பமும் திராட்சை இரசமும் ஆபிரகாமுக்குக் கொடுத்தது இந்தக் கிறிஸ்துவின் திருவுடல் திரு இரத்தத்திற்கு அடையாளம்; ஏனெனில் அக்காலத்தில் இரத்தப்பலிதான் காணிக்கையாகக் கொடுக்கப்பட்டு வந்தது. அதற்கு மாற்றாக மெல்கிசெதேக்கு அப்பமும் இரசமும் கொடுத்தது அடையாளப்பூர்வமானதாகும். இயேசு தம் வாழ்நாளின்போது பல இடங்களில் விருந்துண்டார். அதில் ஏழையர், ஒதுக்கப்பட்டோர் ஆகியோரையும் இணைத்துக்கொண்டார். நற்செய்தி வாசகம் கூறுகின்றபடி இயேசு அப்பங்களைப் பகிர்ந்து மக்களுக்கு உணவளித்த நிகழ்வு அவர் தம் உடலையும் இரத்தத்தையும் நமக்குப் பகிர்ந்தளிப்பதற்கு அடையாளம். ஆனால் நாம் கொண்டாடும் திருப்பலியில் அப்பமும் இரசமும் ஆண்டவர் இயேசுவின் உண்மையான உடலும் இரத்தமுமாகவே மாறுகின்றன. இவை வெறும் அடையாளங்கள் அல்ல. அவற்றுள் இயேசு உண்மையாகவே இருக்கிறார். இது எப்படிச் சாத்தியம் என்ற கேள்விக்கு இடமில்லை. ஏனெனில் இது விசுவாசத்திற்கு உட்பட்ட மறைபொருள். அந்த நம்பிக்கையும் நமக்கு ஒரு கொடையாகவே தரப்பட்டுள்ளது. அதற்காக நாம் கடவுளுக்கு நன்றி சொல்வோம்.

இரண்டுபேர் புதிதாக நண்பர்களாய் ஆனதால் ஒன்றாக விருந்து கொண்டாடினார்கள். ஒருவர் மற்றவரிடம் கேட்டார்: ''உன்னிடம் ஐந்து டி.வி. செட்கள் இருந்தால் எனக்கு ஒரு டி.வி. செட் தருவாயா?'' ''நிச்சயமாக!'' என்றார் மற்றவர். ''உன்னிடம் ஐந்து கார்கள் இருந்தால் எனக்கு ஒரு கார் தருவாயா?'' என்று இவர் கேட்டார். ''சத்தியமாகத் தருவேன்!'' என்றார் அவர். ''உன்னிடம் ஐந்து செட் உடைகள்

இருந்தால் ஒரு செட் உடை எனக்குத் தருவாயா?" என்று இவர் கேட்க, அவரோ, "தரமாட்டேன்" என்றார். "ஏன் தரமாட்டாய்?" என்று இவர் கேட்டபோது அவர் சொன்னார்: "ஏனென்றால் என்னிடம் ஐந்து செட் உடைகள் இருக்கின்றனவே!" இல்லாததைப் பிறருடன் பகிர்ந்து கொள்வதாக வாக்களிக்கிறோம்;ஏனென்றால் கொடுக்க வேண்டியதில்லை. ஆனால் இயேசு தம்மிடம் உள்ளதையே நம்முடன் பகிர்ந்துகொண்டார். ஏழையாய்ப் பிறந்த அவரிடம், ஏழையாய் வாழ்ந்த அவரிடம், நம்முடன் பகிர்ந்துகொள்ள உடலும் இரத்தமுமே இருந்தன. ஆனால் அந்தப் பகிர்வில்தான் எத்துணை ஆழம்! எத்துணைப் பொருள்! ஆம்! அது மீட்பின் பகிர்வு.

இன்றைய இரண்டாம் வாசகம்தான் நற்கருணையின் சாரத்தை நமக்குக் காட்டுகிறது. இப்பகுதி நற்செய்தி நூல்களுக்கு முன்னரே எழுதப்பட்டது. பவுலடியார் கி.பி. 57-ம் ஆண்டுவாக்கில் கொரிந்தில் திருச்சபையை ஏற்படுத்தினார். அந்த இளந்திருச்சபையில் பல ஒழுங்கீனங்கள் நடந்தேறிக்கொண்டிருந்தன. அங்கே நிறைய பூசல்கள் இருந்தன. புதிய கிறிஸ்தவர்கள் கொரிந்தில் இருந்த அப்ரோதித்து என்னும் தேவதையின் கோவிலில் வழிபாடுசெய்யவும் ஈர்க்கப்பட்டார்கள். அந்தக் கோவிலில் ஆயிரம் விலைமாதர்கள் இருந்தார்கள். புதிய கிறிஸ்தவர்கள் இத்தகு தீமைகளில் விழும் ஆபத்தில் இருந்ததால் அங்கே ஒரு மறுதூய்மைப்படுத்தல் தேவை எனப் பவுலடியார் உணர்ந்தார். அவர்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தவேண்டியதின் இன்றியமையாமையைப் பவுலடியார் ஆழமாய் உணர்ந்தார். எனவே இந்த நற்கருணை என்னும் ஒன்றிப்பின் அருள் அடையாளத்தை அவர்களுக்கு விளக்க முற்பட்டார். அதே நேரம் அவர்களிடையே பகிர்வதில் இருந்த சிக்கலையும் களைய முற்பட்டார். நாம் இப்போது உட்கொள்ளும் நற்கருணை சிறிய அப்பமாக உள்ளது. வசிகரிக்கப்பட்டு ஆண்டவரின் இரத்தமாக மாறும் இரசமும் எப்போதும் இறைமக்களுக்குத் தரப்படுவதில்லை. ஆனால் அக்காலத்தில் பெரிய அப்பங்களே பரிமாறப்பட்டன. நற்கருணைக் கொண்டாட்டம் என்பது உண்மையான விருந்தாகவே இருந்தது. செல்வந்தர்களின் வீடுகளில் நடந்த இந்த நற்கருணை விருந்திற்குப் பலர் உணவைக் கொண்டுவந்து பகிர்வர். ஆனால் கிறிஸ்தவர்களாக மாறிய ஏழையர், அடிமைகள்போன்றோர் உணவு எதுவும் கொண்டுவர இயலாது. ஆனால் அவர்கள் வருமுன் முக்கிய விருந்து முடிந்து நற்கருணைக் கொண்டாட்டத்தின் வேறு பகுதியே நடைபெறும். இறுதியில் நடைபெறும் சிறிய விருந்தில்தான் அவர்களுக்கு ஏதாவது கிடைக்கும். 'அகாப்பே' எனும் அன்பு விருந்தாகக் கொண்டாடப்பட்ட நற்கருணை விருந்து ஏழைகளை ஒதுக்குவதாகவும், உண்மையான பகிர்தல் இல்லாததாகவும் இருந்தது. செல்வந்தர்களுக்குத் தனி இடம் இருந்தது. இச்சூழலில் பவுலடியார் நற்கருணையின் உண்மையான பொருளை எடுத்துரைக்கின்றார்.

இன்று நற்கருணைக் கொண்டாடிவரும் நாம் அதன் முழுப்பொருளையும் மறந்துவிடலாகாது. முதலாம் லெயோ என்னும் திருத்தந்தை சொன்னார்: "நாம் கிறிஸ்துவின் திருவுடலையும் திரு இரத்தத்தையும் உட்கொள்வதன் பயன்பாடு எதுவென்றால் நாம் உட்கொள்ளுகின்ற பொருளாகவே மாறுகின்றோம்." அவ்வகையில் நாம் இயேசுவாகவே மாறவேண்டும். முதலில் குறிப்பிட்ட நிகழ்வில், "தம்பி இயேசுவாக

இருக்கட்டும்'' என்று மூத்த பையன் சுயநலத்தோடு சொன்னான். ஆனால் நற்கருணைக் கொண்டாட்டத்திற்கு வந்து ஆண்டவரின் திருவுடலையும் இரத்தத்தையும் உட்கொள்கையில் ஒவ்வொருவரிடமும் கிறிஸ்து கூறுவது, "நீயும் இயேசுவாக இரு'' என்பதாகும். அதாவது தம்மிடம் இருந்த எல்லாவற்றையும் நம்முடன் பகிர்ந்த இயேசுவைப்போல நாமும் மாறவேண்டும். அதன்மூலம் நாம் அனைவரும் நற்கருணை குறித்துக்காட்டும் ஒற்றுமை, அன்பு, சமாதானம் ஆகியவற்றை அனுபவித்து நாம் வாழும் தலத்திருச்சபைகளில் அவை இலங்கிடச் செய்ய முடியும். தொடக்கத் திருச்சபையினர் நாள்தோறும் வீடுகளில் கூடி அப்பத்தைப் பிட்டார்கள். அது பொருளுள்ளதாக மாறிடத் தங்கள் சொத்துக்களைப் பகிர்ந்துகொண்டார்கள். அவர்கள் ஒரே உள்ளமும் ஒரே உயிருமாய் இருந்ததன் வெளிப்பாடாக அது அமைந்தது. அவர்கள் செய்த பொருள் பகிர்வு அவர்களின் ஒன்றிப்பையும் அன்பையும் உறுதிப்படுத்தியது. அப்பத்தைப் பகிர்ந்தவர்கள் பொருளையும் பகிர்ந்துகொள்வதன் அவசியத்தை உணர்ந்திருந்தார்கள் (காண். திப 2:42–47; 4:32–37).

திருத்தந்தை 16–ம் பெனடிக்ட் கர்தினால் ஜோசப் ராத்சிங்காக இருந்தபோது எழுதியது நினைவுகூரத்தக்கது: "திருச்சபை என்பது நற்கருணையின் கொண்டாட்டம்; நற்கருணை என்பது திருச்சபை. அவை ஒன்றுக்கொன்று பக்கத்தில் இருப்பவையல்ல; அவை இரண்டும் ஒன்றேதான். அங்கிருந்துதான் எல்லாமே ஒளிவீசுகின்றன.'' ஆம்! நற்கருணையில் நாம் கிறிஸ்துவோடு சிலுவையில் பலியாகின்றோம். அதை நாம் பெறுகின்றதிலிருந்தும், அதில் நம்மைக் கிறிஸ்து ஏற்றுக்கொள்வதிலிருந்தும் எல்லாமே புறப்படுகின்றன; திருச்சபையின் எல்லாச் செயல்களும், அதன் எல்லா நற்செய்திப் பணிகளும் புறப்படுகின்றன: பசித்தோருக்கு உணவளித்தல், ஆடையற்றோரை உடுத்துதல், தங்குவதற்கு வீடில்லாதவர்களுக்குத் தங்க இடமளித்தல் ஆகிய எல்லாமே புறப்படுகின்றன. உலகெங்கும் நடைபெறும் இந்த அன்புச் செயல்கள் நற்கருணைக் கொண்டாட்டத்திலிருந்தே புறப்படுகின்றன; அந்த நற்கருணையோ சிலுவையிலிருந்து புறப்படுகின்றது. ஆக, நற்கருணையில் ஆண்டவரின் திருவுடல், திரு இரத்தத்தை உட்கொள்ளும் நாம் சிலுவையில் இயேசு தம்மையே பகிர்ந்துகொண்டதைப்போல நம்மையே பகிர்ந்துகொள்ளவேண்டும்.

## பொதுக்காலம்: 11–ம் ஞாயிறு (13.06.2010)

### 2 சாமு 12:7–10இ 13; கலா 2:16இ 19–21; லூக் 7:36–8:3.

ஒரு பள்ளியில் 3–ம் வகுப்பு மாணவனிடம் கணக்கு ஆசிரியை கேட்டார்: "நான் உனக்கு முதலில் மூன்று ஆப்பிள்கள் தருகிறேன்; பிறகு இரண்டு ஆப்பிள்கள் தருகிறேன்; அப்படியானால் உன்னிடம் மொத்தம் எத்தனை ஆப்பிள்கள் இருக்கும்?'' அந்த மாணவன் கொஞ்சம் யோசித்துவிட்டு, "என்னிடம் ஆறு ஆப்பிள்கள் இருக்கும்'' என்றான். ஆசிரியைக்கு அதிர்ச்சியாக இருந்தது. 'இந்தச் சின்னக் கணக்குக் கூடவா தெரியாது! கற்றுக்கொடுத்தது எல்லாம் வீண்தானா?' என்று திகைத்தார். ஆசிரியை அவனிடம், "நீ தப்பாகச் சொல்கிறாய். சரியாகக் கூட்டிச்சொல். முதலில் மூன்று

ஆப்பிள்கள் தருகிறேன். பிறகு இரண்டு ஆப்பிள்கள் தருகிறேன். மொத்தம் எத்தனை ஆப்பிள்கள் உன்னிடம் இருக்கும்?'' என்று கேட்டார். அவன் இப்போதும், ''என்னிடம் ஆறு ஆப்பிள்கள் இருக்கும்'' என்றான். ஆசிரியைக்கு விரக்தியாகிவிட்டது. ஆயினும் அவனுக்கு ஒருவேளை ஆப்பிள்கள் பழக்கப்பட்டவையல்ல போலும் என்று எண்ணி, இவ்வாறு கேட்டார்: ''நான் உனக்கு முதலில் மூன்று மாம்பழங்கள் தருகிறேன்; பிறகு இரண்டு மாம்பழங்கள் தருகிறேன்; அப்படியானால் உன்னிடம் மொத்தம் எத்தனை மாம்பழங்கள் இருக்கும்?'' அவன் இப்போது, ''ஐந்து மாம்பழங்கள் இருக்கும்'' என்றான். ''இதுதான் சரி!'' என்று சொன்னவர், ''ஆப்பிள்பற்றிச் சொன்னபோதும் இதே மாதிரி முதலில் மூன்று, பிறகு இருண்டு என்றுதானே சொன்னேன்! பின் ஏன் நீ 'ஆறு' என்று பதில் சொன்னாய்?'' என்று கேட்டார். அதற்கு அந்த மாணவன் சொன்னான். ''நான் சொன்னது சரிதான்! ஏனென்றால் என்னுடைய டிபன் பாக்சில் ஏற்கெனவே ஓர் ஆப்பிள் இருக்கிறதே!'' மற்றவர்கள் சொல்வது முற்றிலும் தவறானது அல்லது முட்டாள்தனமானது என்று நமக்கு மிக உறுதியாகத் தெரிவதுகூட உண்மையில் சரியானதாகவும் அறிவுசார்ந்ததாகவும் இருக்கலாம். ஏனெனில் முழு உண்மையையும் நாம் கண்டுவிடுவதில்லை. எந்த ஒரு பார்வைக்கும் மாற்றுப்பார்வை இருக்க முடியும்.

இன்றைய நற்செய்தியில் சீமோன் என்னும் பரிசேயர் இயேசு தம்மை ஒரு பெண் தொடுவதற்கு அனுமதிப்பதால் அவர் ஓர் இறைவாக்கினராக இருக்கவியலாது என்று முடிவுசெய்கிறார். அவர் தம்முடைய பாவநிலையை மறந்து இயேசுவின் இறைவாக்கினருக்குரிய பணியைத் தவறாகப் புரிகிறார். இதற்குமுன் பாவிகளுடன் உண்ட ஒரு விருந்தின்போது இயேசு தம்மை மருத்துவருடன் ஒப்பிட்டுப் பேசினார் (லூக் 5:31). சீமோனுடைய அகக்கண்களைத் திறந்திட இயேசு கடன்கொடுப்பவர்பற்றிய உவமையைச் சொல்கிறார். அதிகக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டவரே அதிகம் அன்புசெலுத்துவார் என்ற உண்மையைச் சீமோன் ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று (வ 43). அதன் அடிப்படையில், இயேசு மேலும் புதிய கருத்தைச் சொல்கிறார். சீமோனின் விருந்தோம்பலுக்கும் அப்பெண்ணின் விருந்தோம்பலுக்கும் இடையேயான வேறுபாட்டைச் சுட்டிக்காட்டுகிறார்.

மேலைநாட்டு வழக்கப்படி ஒரு வீட்டில் விருந்தினருக்கு உணவு பரிமாறும்போது தாய் அவர்களிடம், '''சீஸ்' வைக்காததற்கு மன்னிக்கவும்'' என்று சொன்னார். அந்த நேரத்தில் வெளியே சென்ற ஆறு வயது மகன் கொஞ்சம் 'சீஸ்' கொண்டுவந்து மேசையில் வைத்தான். அவர்களுக்கு மிகவும் மகிழ்ச்சி. அவனுடைய சூட்டிகைக்காக அவனைப் பாராட்டினார்கள். பிறகு, ''எப்படி இந்தச் 'சீஸ்' கிடைத்தது?'' என்று வியந்து கேட்டார்கள். பையன் சொன்னான்: ''எலிப்பொறியில் முந்தாநாள் வைத்திருந்ததை எடுத்துவந்தேன்!''

பரிசேயரான சீமோன் இயேசுவை விருந்திற்கு அழைத்தது ஒரு கவுரவத்திற்காக இருக்கலாம். ஒரு விடுதியின் காப்பாளர் பயணிகளுக்குக் கொடுக்கும் விருந்தோம்பலையே அவர் இயேசுவுக்குக் கொடுத்திருக்கின்றார். கீழைநாட்டு வழக்கப்படி விருந்தினர் வரும்போது காலடிகளைக் கழுவுவதற்குத் தண்ணீர் தரவேண்டும். முத்தம் கொடுக்கவேண்டும்; முத்தம் கொடுப்பது பழங்கால இஸ்ரயேலின் பண்பு; இது விவிலியத்தில் பல இடங்களில்

சொல்லப்பட்டுள்ளது. அப்பெண் இதையெல்லாம் செய்தார். பெரும்பாலும் அப்பெண் இயேசுவின் காலடிகளில் நறுமணத்தைலம் பூசவே வந்திருப்பார்; ஆனால் இயேசு சாலையில் நடந்ததால் காலடிகளில் ஒட்டியிருந்த தூசைப் பார்த்ததும் அப்பெண் கண்ணீர் விட்டிருக்கவேண்டும். பின்னர் அக்கண்ணீரால் காலடிகளைக் கழுவியிருக்கவேண்டும். பின்னர் கூந்தலை அவிழ்த்து காலடிகளைத் துடைத்திருக்கவேண்டும். பொதுவிடத்தில் கூந்தலை அவிழ்த்துவிடுவது கீழைநாட்டு வழக்கப்படி ஒரு பெண் தம்மைத் தாழ்த்திக் கொள்வதற்கு அடையாளம். அப்பெண் பாவி என்று சொல்லப்பட்டுள்ளது. ஆனால் அப்பெண்ணின் பாவங்கள் என்ன என்று சொல்லப்படவில்லை. அப்பெண் முன்பு பாவியாக இருந்திருக்கவேண்டும்; பின்பு இயேசுவின் போதனையால் கவரப்பட்டு மனமாற்றம் பெற்றிருக்கவேண்டும். அவர் ஏற்கெனவே மன்னிக்கப்பட்டிருந்தார். அது அவர் காட்டிய அன்பில் தெரிகிறது. அந்த மன்னிப்பே அவர் அன்பு செய்திட வகைசெய்தது. இப்போது, "உம் பாவங்கள் மன்னிக்கபட்டன" (வ 48) என்று இயேசு சொல்லும்போது அந்த மன்னிப்பும் அவருடைய அன்பும் உறுதிசெய்யப்படுகின்றன. ஒருவேளை ஒப்புரவு அருள் அடையாளத்தில் நிறைவேற்றப்படும் அபராதமாக அப்பெண்ணின் அன்புச்செயலை எடுத்துக்கொள்ளலாம். ஆயினும் அப்பெண்ணின் அன்பு அவருக்குப் பாவமன்னிப்பைப் பெற்றுத்தந்தது என்று சொல்லவியலாது. நம்பிக்கையினால் அவர் இயேசுவின் (கடவுளின்) அன்புமிக்க மன்னிப்பை ஏற்றுக்கொண்டார்; அது அவரை மீட்டது (வ 50; காண். லூக் 1:77).

7:47–ல், "இவர் செய்த பல பாவங்கள் மன்னிக்கப்பட்டன; ஏனெனில் இவர் மிகுதியாக அன்புகூர்ந்தார்; குறைவாக மன்னிப்புப்பெறுவோர் குறைவாக அன்புசெலுத்துவோர் ஆவர்" என்று இயேசு சொல்வது கடன்கொடுப்பவர் பற்றிய உவமையின் விளக்கமாகும். அப்பெண் பெரிய அளவுக்கு மன்னிக்கப்பட்டார். சீமோனைப்பற்றி தெரியவில்லை. ஆனால் அவர் குறைவாகவே மன்னிக்கப்பட்டார் என்பது உள்ளடங்கி இருக்கிறது. எனவே அவரால் குறைவாகவே அன்பும் நன்றியும் செலுத்த முடிந்தது.

மறைக்கல்வி வகுப்பில் ஒப்புரவு அருள் அடையாளத்தைப்பற்றி நிறைய நேரம் பேசியபின், "நாம் பாவமன்னிப்பு பெறுவதற்கு முதலில் என்ன செய்யவேண்டும்?" என்று ஆசிரியைக் கேட்டார். ஒரு மாணவன் சொன்னான்: "முதலில் பாவம் செய்யவேண்டும்." இயேசு இங்குப் பேசுவதிலிருந்து, நாம் அதிகம் அன்புசெய்வதற்கு அதிகம் பாவம் செய்திருக்கவேண்டும் என்று பொருள் கொள்ளக்கூடாது. நம் எல்லாருக்குமே பெரிய அளவுக்கு மன்னிப்பு தேவை. ஆனால் நாம் அதை உணராமல் அகப்பார்வையின்றி இருக்கலாம். முதல் வாசகம் கூறுகின்றபடி தாவீது மன்னரும் அப்படித்தான் இருந்தார். "நீயே அம்மனிதன்" (2 சாமு 12:7) என்று இறைவாக்கினர் நாத்தான் கூறி அவருடைய பாவத்தைச் சுட்டிக்காட்டியபின்னர்தான் அவர் தம் பாவத்தை உணர்ந்து மனம் வருந்தி மன்னிப்பு வேண்டினார். நாம் ஒருவேளை நம் கடன்களை மன்னிக்குமாறு இறைவனிடம் வேண்டுவதற்கு மிகவும் அஞ்சியிருக்கலாம்; அல்லது அப்படிக் கேட்க நம்முடைய தற்பெருமை இடம் கொடுக்காமல் இருக்கலாம். அப்படியானால் நாம் நம்முடைய குற்றப்பழியிலேயே கட்டுண்டு கிடப்போம். அது நம்மை அன்புசெய்யவிடாமல் தடுத்துக்கொண்டே இருக்கும்.

# பொதுக்காலம்: 12-ம் ஞாயிறு (20.06.2010)

## செக் 12:10-11இ 13:1; கலா 3:26-29; லூக் 9:18-24.

இறைவாக்கினர்கள் கடவுளின் வாக்கை எடுத்துச் சொல்பவர்கள். அவர்களை முன்பு 'தீர்க்கதரிசிகள்' என்று குறிப்பிட்டு வந்துள்ளோம். பின்னால் நடப்பவற்றை முன்கூட்டியே சொல்பவர்கள் அவர்கள் என்னும் பொருளில் இவ்வாறு அழைத்துவந்தோம். செக்கரியா நூலிலிருந்து எடுக்கப்பட்ட இன்றைய முதல் வாசகம் அப்படியொரு நிகழ்வை முன்கூட்டியே சொல்கிறது. 750 ஆண்டுகளுக்கு முன்னரே இயேசுவின் விலா ஊடுருவக் குத்தப்படும் என்று தூய ஆவியின் ஏவுதலால் இறைவாக்கினர் முன்னறிவித்தார். அதற்காக அழுவோர்பற்றியும் அறிவித்துள்ளார். 'ஒரே பிள்ளையைப் பறிகொடுத்து ஓலமிட்டு அழுபவரைப்போலவும்' (செக் 12:10) என்பதுபோன்ற வரிகள் அன்னை மரியாவின் கண்ணீரையும், சிலுவையடியில் நின்றுகொண்டிருந்த பெண்களின் கண்ணீரையும், திருத்தூதர்கள் மற்றும் இயேசுவைப் போதகர் என ஏற்றுக்கொண்டோரின் கண்ணீரையும் சுட்டுகின்றன.

இன்றைய நற்செய்தி வாசகம் இயேசு யார் என்பதையும் அவருக்கு என்ன நிகழப்போகிறது என்பதையும் முன்னறிவிக்கின்றது. மத்தேயு நற்செய்தியிலும் (மத் 16:13-28) மாற்கு நற்செய்தியிலும் (மாற் 8:27-9:1) இந்நிகழ்வு சொல்லப்பட்டாலும் பேதுருவைத் திருச்சபையின் தலைவராக நியமித்ததுபோன்ற சில காரியங்களை லூக்கா விட்டுவிடுகிறார். இயேசு யார் என்பது லூக்கா நற்செய்தியை எழுதிய காலத்தில் தெளிவாகிவிட்டதால் புதிதாக எதையும் இயேசுவின் ஆள்தன்மை குறித்து எழுத இயலாது என அவர் எண்ணியிருக்கவேண்டும். இயேசு கடவுளின் மெசியா எனப் பேதுரு சொல்வதை இயேசுவும் அங்கீகரிக்கிறார். 'இதை யாரிடமும் சொல்லவேண்டாம்' என்று இயேசு கூறுவதிலிருந்து இதை அறிகிறோம். அரசியல் மெசியாவாக இயேசுவை மக்கள் எண்ணிவிடும் ஆபத்து இருந்ததால் இப்படி இரகசியம் காக்குமாறு இயேசு கட்டளையிடுகிறார். அவர் சிலுவையில் தொங்கும்போது, "பிறரை விடுவித்தான்; இவன் கடவுளின் மெசியாவாகவும், தேர்ந்தெடுக்கப்பட்டவனுமானால் தன்னையே விடுவித்துக்கொள்ளட்டும்" என்று கேலிசெய்தார்கள் (லூக் 23:35). மெசியா என்பதன் உண்மையான பொருளை அவர்களுக்கு விளக்குவதற்கு வாய்ப்பு கிடைப்பதுவரை அவர்கள் இரகசியம் காக்கவேண்டும்.

இப்போது அவர்கள் ஒரு புதிய உண்மையைக் கற்றுக்கொள்ள வேண்டும். இயேசு சிலுவையில் துன்புறவேண்டும்; அவர் இறந்து, பின் உயிர்தெழவேண்டும். இப்படிப்பட்ட காரியம் எதுவும் மெசியாவுக்கு நேரிடும் என்று யூதர்கள் நினைத்ததில்லை; இயேசுவின் சீடர்களும் துன்புறும் ஊழியர் துன்புறுவதுபோல் இயேசுவும் துன்புறவேண்டும் என்பதைப் புரிந்துகொள்ளவில்லை. இயேசு மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு உட்பட்ட மெசியா அல்லர். அவர் தேசிய உணர்வைப் பயன்படுத்தி உரோமையின் நுகத்தை முறித்துத் தாவீதின் ஆட்சியை மீண்டும் கொண்டுவருபவரல்லர். எனவேதான் 'மெசியா துன்புறவேண்டும்' என்று சொல்லாமல், 'மானிடமகன் பலவாறு துன்பப்படவேண்டும்'

(காண். லூக் 9:22) என்று கூறினார். யூதர்கள் எதிர்பார்த்த மெசியா மனித மெசியா. ஆனால் 'மானிடமகன்' எனபவர் தெய்வீக ஆள் (காண். தானி 7:9–22). அந்த அடைமொழி இயேசுவின் பணியுடன் நன்கு பொருந்திப்போகிறது. எசா 52:13–53:12 பகுதியில் துன்புறும் ஊழியர்பற்றிச் சொல்லப்பட்டுள்ளதற்கு இயேசு புதுப்பொருள் கொடுத்தார்.

இயேசுவுக்கு நேரிடும் சிலுவைத் துன்பம் அவருடைய சீடர்களுக்கும் நேரிடும் (9:23). அவர்களும் சிலுவையைச் சுமந்துகொண்டு இயேசுவைப் பின்தொடரவேண்டும். இந்த வார்த்தைகள் நமக்கு அதிர்ச்சியாக உள்ளன. முதன்முதலாகச் சீடர்கள் அவற்றைக் கேட்டபோது அது அவர்களுக்கு மிகவும் அதிர்ச்சியாக இருந்திருக்கவேண்டும். உடனே அவர்கள் இயேசுவை விட்டுவிட்டு ஓடிப்போகாததுதான் ஆச்சரியமாக இருக்கிறது. ஏனெனில் உரோமைப் படைவீரர்கள் சிலுவையில் அறைவதற்கு அவ்வப்போது சிலரின் தோள்களில் சிலுவையை வைத்து அவர்களை நடத்திச்செல்வதை அவர்கள் பாத்திருப்பார்கள். அந்த எண்ணமே அவர்களை குலைநடுங்க வைத்திருக்கும். ஏனெனில் சிலுவைச்சாவு என்பது மிகவும் கொடூரமான சாவாகும். இத்தகைய கொடூரமான சாவுக்குரிய சிலுவையைச் சுமந்துகொண்டுதான் இயேசுவைப் பின்பற்றவேண்டும் என்று அவர் எப்படி நிபந்தனை விதிக்கமுடியும்? இதன் முழுப்பொருளையும் நம்மால் புரிந்துகொள்ள இயலாதுதான். ஆனால் இயேசுவின் துன்பத்திற்கும் நம்முடைய துன்பத்திற்கும் நாம் காணும் விளக்கம் இதுதான்: இத்துன்பங்களுக்குப் பின்னணியில் கடவுளின் ஞானமும் அன்பும் உள்ளன; அவை நம்முடைய புத்திக்கு எட்டாதவை. இயேசுவின் முதல் சீடர்களும் நீண்டகாலம் கடந்தே மெசியாவின் சீடர்கள் துன்புறவேண்டியதின் அவசியத்தைப் புரிந்துகொண்டார்கள். ஆனால் துன்பத்தின் பொருளைப் புரிந்துகொள்ள நமக்கு ஓர் ஒளி கிடைத்துள்ளது. அதாவது, இயேசுவின் துன்பங்களும் சாவும் நம்முடைய மீட்பு என்னும் ஒப்பற்ற கனியைக் கொண்டுவந்துள்ளன. நம்முடைய துன்பங்களும் அத்தகு கனியைக் கொண்டுவரவேண்டும் என்று கிறிஸ்து விரும்புகின்றார்.

இயேசுவைப் பின்பற்றுவோர் தம் சிலுவையைத் தூக்கிக்கொண்டு நாள்தோறும் அவரைப் பின்பற்றவேண்டும் என்று இயேசு கூறுகிறார் (9:23). லூக்கா மட்டுமே 'நாள்தோறும்' என்ற சொல்லை இணைத்துள்ளார். இது புதிய பொருளைத் தருகிறது. சிலுவையைச் சுமந்துசெல்வோர் ஒருசில மணிநேரத்திலேயே அதில் அறையப்படுவர். பெரும்பாலும் ஒருசில நாள்களில் இறப்பர். 'நாள்தோறும்' அவர்கள் சிலுவையைச் சுமப்பதில்லை. நல்லவேளையாக அந்தக் கொடிய வேதனையானது சாவுடன் முடிந்துவிடுகிறது. ஆனால் நாள்தோறும் என்பது சாவில் முடியாத வேதனை. ஆக, இங்குச் சிலுவை என்ற மரம் இருக்கிறதா என்பது முக்கியமன்று. அத்தகு துன்பத்தை நாம் 'நாள்தோறும்' அனுபவிக்கவேண்டியிருந்தாலும் அனுபவிக்கவேண்டும். அது சிலுவைச் சாவைவிடக் கொடியதாக இருக்கும். ஏனெனில் 'நாள்தோறும்' அது முடியாமல் தொடரும். வாழ்க்கையில் உண்மையான முறையில் இயேசுவைப் பின்பற்றுபவருக்கு இத்தகு துன்பம் உண்டு.

நாள்தோறும் ஒரு கனவைக் கண்டு மிகவும் உளவியல் குழப்பத்திற்கு ஆட்பட்டிருந்த ஒரு மனிதர்பற்றிய கதையொன்று உள்ளது. ஒவ்வோர் இரவும் ஒரே கனவு அவருக்கு வந்து, காலையில் கடுமையான தலைவலியுடனும் முற்றிலும்

களைத்துப்போன நிலையிலும் அவர் கண்விழிப்பார். எனவே தாங்கமுடியாமல் ஓர் உளநல வல்லுநரிடம் சென்று, "ஒவ்வோர் இரவும் நான் ஒரு கதவைத் திறக்க முற்படுவதுபோல் கனவுகாண்கிறேன். அந்தக் கதவு வழியாக நான் போய்த்தான் ஆகவேண்டும் என்று உணர்கிறேன். அது ஒரு கண்ணாடியிலான பெரிய கதவு. அதில் ஒரு வார்த்தை எழுதப்பட்டுள்ளது. இரவு முழுவதும் நான் கதவை இழுத்துக்கொண்டே இருக்கிறேன். ஆனால் கதவு திறப்பதில்லை. இறுதியில் நான் மிகவும் களைத்து அக்கதவின் அருகே விழுந்துவிடுகிறேன்" என்று சொன்னார். உளநல வல்லுநர் சில நிமிடங்கள் யோசித்துவிட்டு, "அதில் எழுதப்பட்டிருக்கும் வார்த்தை என்ன?" என்று கேட்டார். "அதில், 'தள்ளு' என்று எழுதப்பட்டுள்ளது என்றார் அம்மனிதர்.

இக்கதையைக் கூறும் எட்வர்ட் யேஸ் என்பவர் இவ்வாறு எழுதுகிறார்: நம்மில் பலர் உண்மைநிலைக்கு எதிராக 'இழுத்து'க்கொண்டே இருக்கிறோம். அந்த உண்மைநிலையானது நம் வாழ்வுடன் வேதனையும் துன்பமும் பின்னிப் பிணைந்தவை என்பதாகும். ஆனால் நாம் 'தள்ளி'க்கொண்டு துன்பம் குறித்த மறைபொருளுடன் உள்ளே நுழைந்தால் அது எல்லாவகைக் கதவுகளையும் நமக்குத் திறக்கும் என்பதைக் கண்டுகொள்ளலாம். நாம் துன்பங்களைப் புறக்கணித்தாலோ, அதனுடன் போரிட்டாலோ அந்த மனிதரைப்போல் குழப்பத்திலும் களைப்பிலும் விழுந்துவிடுவோம். துன்பமும் வேதனையும் படைப்பாற்றல் கொண்டவையாக இருக்கலாம். அவை நம் வளர்ச்சிக்கு நம்மை இட்டுச்செல்லலாம்." ஆம்! நம் மீட்பு என்பது துன்பங்களின் வழியாகப் பெறப்படுவதுதானே!

## பொதுக்காலம்: 13-ம் ஞாயிறு (27.06.2010)

### 1அர 19:16ஆஇ 19-21; கலா 5:1இ 13-18; லூக் 9:51-62.

அமெரிக்கப் பயணி ஒருவர் இஸ்ரயேலுக்குப் போய்ச் சிலநாள்கள் தங்கியிருந்தார். ஒருமுறை நிறைய குப்பைகளைக் குப்பைத் தொட்டியில் போடவேண்டியிருந்தது. ஒரு கோணிப்பையில் அவற்றை எடுத்துக்கொண்டு தெருக்களில் அலைந்தார். ஒரு குப்பைத்தொட்டியையும் காணவில்லை. வேறு வழியில்லாமல் தெருவோரம் கொட்டுவதற்கு முயன்றார். அப்போது போலீஸ்காரர் ஒருவர் அதைப் பாத்து, "இங்குக் கொட்டக்கூடாது" என்று தடுத்தார். "வேறு எங்கே கொட்டுவது?" என்று அமெரிக்கர் கேட்டபோது போலீஸ்காரர், "என் பின்னே வாருங்கள்" என்று அழைத்துக்கொண்டு போனார். ஒரு பெரிய கட்டடத்திற்கு முன்னால் இருந்த தோட்டத்திற்கு அவரைக் கூட்டிச் சென்றார். அங்கே அழகிய மலர்கள்கொண்ட செடிகள் ஏராளம் நின்றன. "இங்கே கொட்டுங்கள்" என்று அவர் சொன்னார். அமெரிக்கர் திகைத்தாலும் போலீஸ்காரர் சொன்னதால் அந்தப் பூச்செடிகள்மேல் குப்பையைக் கொட்டினார். தமக்கு உதவிசெய்ததற்காக நன்றிசொன்ன அமெரிக்கர் போலீஸ்காரரிடம், "இதுதான் இஸ்ரயேல் நாட்டு விருந்தோம்பலா?" என்று கேட்டார். போலீஸ்காரர் சொன்னார்: "இல்லை! இது ஈரான் நாட்டுத் தூதரகம்!" இது எப்படி இருக்கு?

நாட்டுக்கு நாடு பகைமை, குரோதம் உள்ளன. இனத்திற்கு இனம் வெறுப்பு. சமாரியர் என்பவர்கள் அசீரியப் படையெடுப்பால் (கி.மு. 722) யூதர்களை மணந்து உருவான கலப்பின மக்கள். அவர்களுக்கும் மற்ற யூதர்களுக்கும் எப்போதும் பகை இருந்துகொண்டே இருந்தது. வடக்கே வாழ்ந்த யூதர்கள் எருசலேம் கோவிலுக்குச் செல்லும்போது சமாரியரின் பகுதி வழியாகச் செல்வதில்லை. உண்மையில் எருசலேமில் வழிபடுவதுகுறித்தே அவர்களிடேயே பிளவு இருந்தது. கி.மு. 4-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சமாரியர் கரிசிம் மலையில் போட்டிக் கோவில் ஒன்றைக் கட்டியிருந்தனர். அது ஜான்ஹிர்கானுஸ் எனும் மக்கபேயத் தலைவனால் கி.மு. 164-ல் அழிக்கப்பட்டிருந்தது. ஆயினும் இயேசுவைப் பொறுத்தவரை நிலைமை வேறாக இருந்தது. அவர் ஏற்கெனவே சமாரியரின் நகர்களில் போதித்திருந்தார்; அவர்களின் அழைப்பிற்கிணங்க அவர்களுடன் தங்கியுமிருந்தார். ஆயினும் அவர் தங்கியது சிறிதுகாலம் மட்டுமே. அவர்களிடயே அவர் வல்லசெயல்கள் எதுவும் செய்யவுமில்லை. யூதர்களும் அதை விரும்பியிருக்க மாட்டார்கள். இருப்பினும் அவர்கள் இயேசுவை நன்கு அறிவார்கள். இயேசு எருலேமுக்குச் செல்லவிருந்ததால் விவேகத்துடன் தமக்குமுன் தூதர்களை அங்கு அனுப்புகிறார். இயேசுவும் அவரைச் சார்ந்தவர்களும் ஓரிரவாவது தங்கவேண்டும்; அவர்களுக்கு உணவுவேண்டும். இயேசுவுடன் பெருங்கூட்டம் பயணிப்பதால் இது அவ்வளவு சிறிய தேவை என்று சொல்லவியலாது. ஆனால் கடினமன தற்பெருமையானது மக்கள் கடவுளின் அழைப்பை உதறிவிடுமாறு செய்துவிடுகின்றது. ஏனெனில் முன்சார்பெண்ணங்கள் விரைவில் மறைந்துவிடுவதில்லை. சமாரியர்கள் தங்களுக்கு வழங்கப்படவிருந்த கடவுளின் அருளைப் புறக்கணித்தார்கள். அவர்கள் இயேசுவை மற்ற நேரங்களில் ஏற்றிருப்பார்கள். ஆனால் அவர் யூதர்களின் தலைநகராகிய எருசலேமுக்குச் செல்லத் தீர்மானித்திருந்ததால் (லூக் 9:51) அவருக்கு விருந்தோம்பல் செய்து தங்களுடன் தங்கவைக்க விரும்பவில்லை.

யாக்கோபும் யோவானும் தங்களுடைய ஆண்டவருக்குச் செய்யப்பட்ட அவமரியாதைக்குத் தண்டனை தரவேண்டும் என்று துடிக்கின்றார்கள். இறைவாக்கினர் எலியா ஐம்பதுபேர்மேலும் ஐம்பதின்மர் தலைவன்மீதும் வானின்று நெருப்பு இறங்கிவந்து சுட்டெரிக்குமாறு கட்டளையிட்டார் (2அர 1:9-10). எனவே அவ்வாறு நெருப்பை வரவழைத்து எலியாவைவிடப் பெரியவர் இங்கே உள்ளார் என்று ஏன் காட்டக்கூடாது என அவர்கள் நினைக்கின்றார்கள். இயேசு அவர்களைக் கண்டிப்பது அவரைப் பின்பற்றும் எல்லாருக்குமான பொதுவான படிப்பினையாகும். ஏனெனில் மானிடமகன் அழிப்பதற்கன்று, மீட்கவே வந்தார். பின்னாளில் அவர் தற்காப்புக்காகக்கூட வாள் எடுக்கக்கூடாது என்று சொல்வார்: "வாளை எடுப்போர் அனைவரும் வாளால் அழிந்துபோவர்" (மத் 26:52). மலைப்பொழிவில் நற்செய்தியின் சாரத்தை அவர் எடுத்துச் சொல்லியிருந்தார். அதைத் தம் நடவடிக்கையால் வெளிப்படுத்தி இருந்தார். தம்மை மாதிரியாகக் கொள்ளுமாறு கூறியிருந்தார்: "நான் கனிவும் மனத்தாழ்மையும் உடையவன்; என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள்" (மத் 11:29). ஆனால் அது கற்றுக்கொள்வதற்குக் கடினமான பாடமாகும். தீமையை எதிர்த்து நில்லாமை, பிறர் அநீதி செய்தாலும் கண்டுகொள்ளாமை, பிறர் கன்னத்தில் அறைந்தாலும் சகிப்புத்தன்மை காட்டுதல், உடமைகளைப் பிறர் அபகரித்தாலும் விட்டுவிடுதல் ஆகியவை மிகவும் கடினமான போதனைகளாகும். இத்தகு

போதனைகள் அவர்கள் தங்கள் தொழுகைக்கூடங்களில் கேட்ட போதனைகளினின்று முற்றிலும் மாறுபட்டவை. இவற்றைக் கடைப்பிடிப்பதற்கு விசுவாசம் வேண்டும். ஆனால் இத்தகு விசுவாசம் வெற்றியைக் கொண்டுவரும்; உலகை வெல்லும்.

யூதர்களின் இலக்கியத்தில் முதுபெரும் தந்தையும் நேர்மையாளரும் நம்பிக்கையின் மாதிரியுமான ஆபிரகாமைப்பற்றி ஒரு கதை உண்டு. ஆபிரகாம் நல்ல விருந்தோம்பல் பண்புகொண்டவர் (காண். தொநூ 18:1-8). எப்போதுமே காலை உணவை யாராவது ஒரு வழிப்போக்கருடன்தான் உண்பார். ஒருநாள் வழிப்போக்கர் யாரும் வராததால் மிகவும் வருத்தமுற்று கடவுளிடம் மன்றாடினார். கடவுளும் ஒரு வழிப்போக்கரை அனுப்பினார். பசியுடன் வந்த அவருக்கு உணவு பரிமாறப்பட்டது. ஆபிராகாம் உண்பதற்குமுன் 'யாவே' கடவுளுக்கு நன்றிச்செபம் சொன்னார். அந்த வழிப்போக்கரோ பிறவினத்துக் கடவுளுக்கு நன்றிச்செபம் சொன்னார். இது நேர்மையாளரான ஆபிராகாமுக்கே சினத்தை ஏற்படுத்தியது. அவர் அந்த வழிப்போக்கருக்கு உணவளிக்காது விரட்டிவிட்டார். ஆனால் பின்னர் ஆபிரகாமுக்குத் தோன்றிய கடவுள் அவரைக் கடிந்துகொண்டார். "அந்த மனிதன் என்னை வழிபடாமல் இருந்தாலும் இத்தனை ஆண்டுகளாய் அவனுக்கும் நான் உணவளித்து வந்துள்ளேன். ஆனால் உன்னால் ஒருநாள்கூட அவனுக்கு விருந்தோம்பல் செய்யமுடியவில்லையே!" என்று ஆண்டவர் ஆபிரகாமைக் கடிந்தார்.

யாக்கோபும் யோவானும் தங்கள் தற்பெருமை புண்படுத்தப்பட்டதாலேயே இயேசுவை ஏற்றுக்கொள்ளாத சமாரியரை அழித்துவிட விரும்பியிருக்கலாம்; அவ்விருப்பம் பெரும்பாலும் தங்கள் ஆண்டவருக்கு மரியாதை ஏற்படவேண்டும் என்ற ஆர்வத்தினால் வந்ததன்று. மக்கள் தங்கள் நாடு, இனம், அமைப்பு ஆகியவைகுறித்துக் கொண்டிருக்கும் ஆர்வம் பலநேரம் உண்மையான ஆர்வமாக இல்லாமலிருக்கலாம். அது தற்பெருமைக்குப் பூசப்பட்ட சாயமாக இருக்கலாம்.

இந்த நிகழ்வு சீடருக்கான பயிற்சிபற்றிய பகுதியில் வருகிறது. 'இயேசு விண்ணேற்றம் அடையும் நாள் நெருங்கிவரவே எருசலேமை நோக்கிச் செல்லத் தீர்மானித்தார்' என்று சொல்லப்பட்டுள்ளது (9:51). அதாவது இயேசு பாடுகள்படுவதற்காக எருசலேமுக்குச் செல்கிறார். அவருடைய துன்புறும் மனப்பாங்கு சீடர்களுக்கு வேண்டும். தம்மைத் துன்புறுத்துவோரைக்கூடச் சீடர் கண்டனம் செய்யலாகாது. இயேசுவும் தம்மை ஏற்றுக்கொள்ளாமல் சிலுவையில் அறைந்து கொன்றவர்களை மன்னிப்பார் (23:34). சிலுவைவரை இயேசுவைப் பின்பற்றுவதற்கு முழு அர்ப்பணம் தேவை. அதை மூன்று கூற்றுக்களின் வழியாக இயேசு தெரிவிக்கிறார். நரிகளுக்கும் பறவைகளுக்கும் மறைந்துகொள்ள இடம் இருக்கும். மானிட மகனுக்கும் அவரைப் பின்பற்றுவோருக்கும் எந்தப் பாதுகாப்பும் இருக்காது (9:57-58). யூதச் சட்டத்தில் ஒருவன் எவ்வாறு தன் பெற்றோரை நல்லடக்கம் செய்யவேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது. அதை அவன் மீறக்கூடாது. ஆயினும் நற்செய்தியும் இறையாட்சியும் அவசரமாகப் பின்பற்றப்படவேண்டியவை (9:59-60). எலிசா தம் குடும்பத்திற்குப் பிரியாவிடை சொல்ல எலியா அனுமதித்தார் (1அர 19:19-21). ஆனால் இறையாட்சியின் அழைப்பு மிகவும் அவசரமானது என்பதை இயேசுவின் சீடர் புரிந்துகொள்ளவேண்டும் (9:61-62).

# விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி

## எசாயா 23-44

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | | | 9 |
| | | | | 2 | | | | | |
| | 3 | | | | | | 10 | | |
| 4 | | | | | | | 11 | | |
| | | | | 17 | 5 | | | | |
| | | | 6 | | | | | 19 | |
| | | | | | | 12 | | | |
| | | 7 | | | | | | 14 | |
| | | | | | | 13 | 18 | | |
| 15 | 16 | 8 | | | | | | | 20 |

**தயாரித்தவர்**
சகோ. இல்லுமினாத்தா மேரி.
இம்மாக்குலேட் ஜெனரலேட்
பாண்டிச்சேரி- 605 001

**பரிசுகள்**
குலுக்கல் முறையில் 4 பேருக்கு
பதில்கள் வந்து சேரவேண்டிய
**கடைசி நாள்**
17.06.2010
அனுப்ப வேண்டிய முகவரி
அருள்சகோதரி பெரேரா
TNBCLC, P.B. 12, திண்டிவனம்.

### இடமிருந்து வலம்

1. என் ..... நீ விலையேறப்பெற்றவன்; மதிப்புமிக்கவன்; 2. உலகிலுள்ள அனைத்து அரசுகளுக்கும் நீர் ஒருவரே .....; 3. ஆண்டவர்மீது என்றென்றும் ..... கொள்ளுங்கள்; 4. அருகில்உள்ளோரே, என் ..... அறிந்து கொள்ளுங்கள். 5. ..... போல் புறக்கணிக்கப்பட்டுள்ளது; 6. ஆனால், உமது பெயரை மட்டுமே ..... போற்றுகின்றோம். 7. ஏனெனில், இது ஆண்டவர் கூறிய ..... 8. ஒடுக்கப்பட்டோர் மீண்டும் ..... மகிழ்ச்சி பெறுவர்;

### வலமிருந்து இடம்

2. பொய்ம்மை எனும் புகலிடத்தைக் ..... அழிக்கும்; 7. "நீர் கூறிய ஆண்டவரின் ..... நல்லதே" என்றார். 9. ..... வாழ்வோரை அவர் தாழ்த்துகின்றார்; 10. உன் வழித்தோன்றல்களுக்கு நான் ..... வழங்குவேன்; 11. அவரே நமக்கு மீட்பு அளிப்பவர். 12. நான் ..... வெட்டி அதன் நீரைப் பருகினேன்; 13. யாழின் ..... நின்றுவிட்டது.

### மேலிருந்து கீழ்

1. அந்நாளில் யூதா நாட்டில் இந்தப் ..... பாடப்படும்: 3. அவருக்காகக் காத்திருப்போர் ...... பெற்றோர். 6. ..... இறைவன்; எந்நாளும் இருப்பவரும் நானே; 7. திக்குவாயரின் ..... தயக்கமின்றித் தெளிவுடன் பேசும். 9.வறியவனுக்கு அவன் துன்பத்தில் ..... நீரே; 14. ஆண்டவர்மேல் நம்பிக்கை வைத்திருப்பவர்களோ ..... ஆற்றல் பெறுவர்.

**கீழிருந்து மேல்**

6. ..... அதில் குடியிருப்போரால் தீட்டுப்பட்டுள்ளது; 7. பல இனத்தாரோடும் நீங்கள் ..... செய்கின்றீர்கள்; 15. திகிலின் ஓசைகேட்டு ஓடுபவர் ..... வீழ்வார்; 16. ஆண்டவரே ..... நீதித் தலைவர்; 17. அது பரிசோதிக்கப்பட்ட கல்; விலையுயர்ந்த .....; 18. ..... உயர்வானவற்றைச் சிந்திக்கின்றனர்; 19. ..... அதன் கிளைகள் முறிக்கப்படுகின்றன; 20. 'நீ என் .....; நான் உன்னைத் தெரிந்தெடுத்தேன்;

---

## மே மாத குறுக்கெழுத்துப் போட்டிக்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

| | | |
|---|---|---|
| 01. | புயல் | 17:13 |
| 02. | தணலை | 1:31 |
| 03. | இரவு | 21:11 |
| 04. | ஆணவம் | 2:17 |
| 05. | மண்ணுலகே | 1:2 |
| 06. | நாடும் | 18:2 |
| 07. | அதன் | 10:17 |
| 08. | நேரம் | 13:22 |
| 10. | கவி | 5:1 |
| 11. | தூயவர் | 6:3 |
| 13. | நாள் | 13:6 |

**வலமிருந்து இடம்**

| | | |
|---|---|---|
| 03. | இனி | 20:6 |
| 04. | ஆணை | 13:3 |
| 09. | முன்பு | 1:21 |
| 10. | கடவுள் | 8:10 |
| 12. | பாவம் | 6:7 |
| 14. | சுமையாக | 22:24 |
| 16. | உள்ளம் | 1:14 |
| 20. | தவிடு | 2:15 |
| 21. | பூசி | 1:6 |
| 22. | உம் | 12:1 |

**மேலிருந்து கீழ்**

| | | |
|---|---|---|
| 01. | புல் | 15:6 |
| 03. | இவற்றை | 11:2 |
| 04. | ஆரவாரம் | 14:7 |
| 05. | மகிழ்ச்சியை | 9:3 |
| 08. | நேர்மை | 11:5 |
| 10. | கதியை | 14:10 |
| 11. | தூய | 6:13 |
| 15. | தரும் | 5:4 |
| 16.. | உண்மையுடன் | 16:5 |
| 17. | கொள்ளும் | 3:11 |
| 22. | உணவ | 14:30 |

**கீழிருந்து மேல்**

| | | |
|---|---|---|
| 04. | ஆலை | 5:2 |
| 07. | அரண் | 22:8 |
| 13. | நாடு | 1:7 |
| 18. | புலம்பி | 3:26 |
| 19. | யாருமில்லை | 11:9 |
| 23. | நலம் | 3:10 |

## மே மாத குறுக்கெழுத்துப் போட்டியில் பரிசு பெறுபவர்கள்

1. சகோ. சிறியா, புனித அன்னாள் இல்லம், அம்மாப்பேட்டை, தஞ்சை.
2. ம.லூர்து பரஞ்சோதி, க;லலுக்குழி, திருச்சி.
3. எஸ். பால்ராஜ், மேட்டுப்பாளையம், ஊட்டி
4. சகோ.அற்புத மேரி - ஆண்டிச்சியூரணி,சிவகங்கை.

## சரியாக விடை எழுதி பாராட்டுப் பெறுபவர்கள்

சகோ. அல்போன்சா-சுந்தரநாச்சியார்புரம், சகோ.மேரிப்ளாரன்ஸ்- பசுபதி கோவில், சகோ.மவுரின் மேரி,-இம்மாக்குலேட் போர்டிங்,பாண்டி, எப்.ஜெசிந்தா-கொடுங்கால், அ.ஞானமணி ஆ.ஒ.- மாரம்பாடி, சகோ.ஹில்டா ஜூலியட்-ஒட்டந்தாங்கல், இ. எல்வின்கென்னத் ஜேசன்-அணையேரி, இ.இனிய சான்ட்ரா-அணையேரி, இ.இருதய மேரி-அணையேரி, எ.சலோமை-அணையேரி, எ.இசையாஸ் த.ஆ.-அணையேரி, சீனியம்மாள்-தேவிப்பட்டணம்-நெல்லை, சகோ.கிராசியா மேரி சி.ஐ.சி.-மதுரை, சகோ.செபஸ்டினா சி.ஐ.சி.-மதுரை, ஒய்.எஸ்.எ.ரோஸ்-நம்மியந்தல், சகோ.சிறியா-அம்மாப்பேட்டை, சகோ.லிபியா மேரி ம.உ.ச.-வளனகம்-திண்டுக்கல், எ.மரிய கிறிஸ்து ராஜ் த.ஆ.-மகாராஜபுரம்-விழுப்புரம், சகோ.மேரி கபிரியேல்-புனித சம்மனசு இல்லம்-கும்பகோணம், எஸ்.சந்தனம்-திருச்சி 21, டி.ஜான் ஜோசப்-சுந்தர் நகர்-திருச்சி, ச.கமலம்-காஜாபேட்டை-திருச்சி, சகோ.விவினா-உவரி, ஜெப இயேசு-இலாஸ்பேட்டை-பாண்டி, சகோ.சார்லட் மேரி-முத்தியால்பேட்டை, சகோ.மேரி பாஸ்கால்-ஒ.எல்.ஹெச். மருத்துவ மனை-தஞ்சை, ஒய்.எ.ஜான் பச்தரல்லி-சி.நம்மியந்தல், ஜே.சவரியம்மாள் ஜேம்ஸ்-சிவன்புரம்-மேட்டுப் பாளையம், அ.புஷ்பம்-சாலைக்கிராமம், சகோ.அக்குயினாஸ் மேரி ஒ.எஸ்.எம்.-பெத்தனி-மேலூர்-தூத்துக்குடி, மனோன்மணி ராஜன்-ராஜதெரு-வடக்கன் குளம், சகோ.நேவிஸ் சி.ஐ.சி.-பாளையங்கோட்டை-நெல்லை, எம்.சந்தியாகு-முகையூர், எம்.ஆரோக்கிய சாமி-கோட்டப் பாளையம், எஸ்.ஜெரோம் ஜெயராய்-ஆலந்தூர்-சென்னை, சகோ.லீமா-ராமகுப்பம், சகோ.சின்னராணி-அணிலாடி, திருமதி.கே.எல். இசபெல்லா லூர்துராஜன்-சி.நம்மியந்தல், சுவக்கீன் வேதியர்-அரியாங்குப்பம், சகோ.தார்சில் மேரி எஸ்.எம்.எம்.ஐ.-பாத்திமா மடம்-ஜெயங்கொண்டம், சகோ.லாரன்ஸோ-எஸ்.எம்.எம்.ஐ.-பாத்திமா மடம்-ஜெயங்கொண்டம், சகோ. சகாய லாரன்ஸ்-எஸ்.எம்.எம்.ஐ.-பாத்திமா மடம்-ஜெயங்கொண்டம், சகோ.மேரி ஜூவன்னா-சாலைகிராமம், சகோ.ரொமானா ம.ஊ.ச.-பெத்தனி-மேலூர்-தூத்துக்குடி, சகோ.பொலன்ஷியா-இராயப் பேட்டை, திரு.சி. கஸ்பார் ஓ.த.ஆ.-இயைாங்கண்ணி, சகோ.குழந்தை-சி.ஐ.சி.-கொசவப் பட்டி-திண்டுக்கல், சகோ.மேரி வயோலா ஐ.சி.-வத்தலகுண்டு, திருமதி.ஜான்சி ஜெனிபர்-கீழ கபிஸ்தலம், அ.ரெஜி ஆரோக்கிய செல்வி-மாரம்பாடி, திருமதி.செங்கோல் திரவியம்-மாரம்பாடி, வி.எம்.தாமசு-பழவந்தாங்கல்-சென்னை, சகோ.ஜெயமேரி-பெங்களூர், நாசரேத் சதன், திருமதி.ஏஞ்சல்-மேட்டுப்பாளையம், சகோ.ஜோவிற்றா மேரி-சவேரியார்பாளையம், சகோ.நிர்மலா-பஞ்சம்பட்டி, சகோ.ஜெயமேரி-டக்கோஸ்டா ஸ்கொயர்-பெங்களூர், எம்.ஜோஸ்பின் மனோகர்-வடக்கன்குளம், எ.சகாய லூசியா ஜெனட்-கே.கே.நகர்-சென்னை, சகோ.அனி மேரி கருத்தப்பிள்ளையூர், எ.சூசை அந்தோனி-திருமலாபுரம்-நெல்லை, சகோ.மேரி ஸ்கொலாஸ்டிக்கா-திரு இருதய இல்லம்-குருசடி-குமரி, பி.சகுந்தலா மேரி-வெள்ளாண்டி வலசு. எஸ்.வில்லியம்-விக்கிரவாண்டி, எ.வின்செண்ட்-மேலப்புதூர், சகோ. குழந்தை ஆடையூர் கிராமம்-தி.மலை, சகோ. ரோசலின் மேரி-பணகுடி, திருமதி.ஹில்டா தாஸ்-முத்தியால்பேட்டை, திருமதி. செல்வி பொன்னுமுத்து-சித்தந்தோப்பு-குமரி, சகோ.சாந்தி மேரி - சேலம்-7.

Regd No. TN/PMG (CCR)/31/09-11 & WP. No. 24

## பள்ளி மறைக்கல்வி பாடநூல்கள் (தமிழ்)

| | | |
|---|---|---|
| 1-ஆம் வகுப்பு | - இயேசு எனக்காக | 12.00 |
| 2-ஆம் வகுப்பு | - கடவுளின் கொடைகள் | 12.00 |
| 3-ஆம் வகுப்பு | - உறவுப் பயணம் | 15.00 |
| 4-ஆம் வகுப்பு | - இயேசுவே வழியும் வாழ்வும் | 16.00 |
| 5-ஆம் வகுப்பு | - உமது ஆட்சி வருக | 16.00 |
| 6-ஆம் வகுப்பு | - வாழ்வு தரும் அருள்சாதனங்கள் | 16.00 |
| 7-ஆம் வகுப்பு | - மாண்பை வளர்க்கும் கட்டளைகள் | 16.00 |
| 8- ஆம் வகுப்பு | - விடுதலை தரும் விவிலியம் | 16.00 |
| 9- ஆம் வகுப்பு | - இயேசு உலகின் மீட்பர் | 16.00 |
| 10-ஆம் வகுப்பு | - நிறைவாழ்வுப் பயணத்தில் திருச்சபை | 16.00 |
| 11-ஆம் வகுப்பு | - கிறிஸ்துவில் என் வாழ்வு - 1 | 18.00 |
| 12-ஆம் வகுப்பு | - கிறிஸ்துவில் என் வாழ்வு - 2 | 18.00 |

## SCHOOL CATECHISM BOOKS (ENGLISH)

| | |
|---|---|
| English Catechism I to Vth Std. (each) | 35.00 |
| English Catechism Std. VI to VIII Std. (each) | 40.00 |
| English Catechism Std. IX to XII Std. (each) | 45.00 |

## ஞாயிறு மறைக்கல்விப் பாடநூல்கள்

| | |
|---|---|
| முதல் நிலை - கடவுள் நம்மோடு | 10.00 |
| 2ஆம் நிலை - உறவில் வளர்வோம் | 12.00 |
| 3ஆம் நிலை - வரலாற்றில் இறைவன் | 12.00 |
| 4ஆம் நிலை - கிறிஸ்துவில் வாழ்வு | 15.00 |
| 5ஆம் நிலை - வளரும் இறையரசு | 15.00 |
| 6ஆம் நிலை - வார்த்தை வழி வாழ்வு | 16.00 |
| 7ஆம் நிலை - இலட்சியப் பயணம் | 18.00 |
| 8ஆம் நிலை - உறவில் மகிழ்வோம் | 18.00 |

Edited by *Rev. Fr. R. Maria Dellus,* TNBCLC
Printed and Published by *Rev. Fr. A. Peter Abir,*
Manager, TNBCLC Press, Tindivanam 604 001 (04147 - 222177, 223177)